பதிவு எண் M. 4900. 16-பக்கங்கள்.

# குடி அரசு

நிறுவியது: 1924.

உள்நாடு வருட சந்தா ரூ. 7-0-0. தனிப்பிரதி 0-2-0.
வெளிநாடு ,, ரூ. 9-0-0. ,, 0-2-6.

மாலை 22 } ஈரோடு 3-9-1949 சனிக்கிழமை } மலர் 52.

# சகுனம் சோதிடம்!

★

மத சித்தாந்தங்களிலுள்ள நம்பிக்கையே மாந்தரின் பகுத்தறிவைச் சிதைத்து, அவர்களை ஜோதிட தீர்க்க தெரிசிகள் என்று சொல்லப்படுகின்றவர்களின் மாய வலைகளில் எளிதில் அகப்படுமாறு செய்கின்றது.

மறைவாக உள்ள இடத்தைக் காணவேண்டுமென்பதில் மனிதனுக்கு ஆவல் அதிகம்; அதனால் இனி வரப்போகும் எதிர்கால சம்பவங்களை முன்னமே உணர்ந்து, அவைகளால் தனக்கு, தற்காலத்திலிருக்கும் கஷ்ட நிஷ்டூரங்கள் ஒழிவதற்கு ஏதாவது வழியுண்டாவென்பதுபற்றி அளவு கடந்த ஆசையோடும் விசாரிக்கத் தொடங்குகின்றான்.

பூசாரிகளும், மத குருக்களும் எதிர்காலத்தைப்பற்றி முன்னமே அறிந்துகொண்டிருப்பதாக எப்பொழுதும் கூறிக்கொண்டிருக்கின்றனர். தேவதைகளுக்குப் பலியிடப்படும் பிராணிகளைத் தும்மல், தடித்தல் முதலிய நடவடிக்கைகளைக் கவனித்தல்; பறவைகள் பறந்து போகும் திசைகளைப் பார்த்தல்; அந்நாட்டினருக்கு ஏற்பட்ட யுத்தம் முதலிய சம்பவங்களை வேத பாராயணம் பண்ணுதல்; கஸாண்டிராவின் கதை; முதலிய இவைகள் கிரேக்கர், உரோமர் என்பவர்கள் எதிர்கால சம்பவங்களை அறிவதற்கு அடையாளங்களாக மேற்கொண்டார்களென்பது நன்கு விளங்குகின்றன. இன்னும் மந்திரவாதிகளென்ன, மை யிட்டுக் குறி பார்க்கின்றவர்களென்ன, ஜோதிட ரேகை சாஸ்திரக்காரர்களென்ன; தீர்க்கதரிசிகளெனப் படுவோரென்ன—இவர்களெல்லாம் சட்ட விரோதமான பல செய்கைகளை மேற்கொண்டு ஒன்றுமறியாத பாமர மக்களைத் தங்களிஷ்டம் போல் ஆட்டி வருகின்றனர். இந்தியாவிலே மேற்கூறியோர், தங்களுடைய அட்டகாசங்களைப் பாமர மக்களிடத்தில் மாத்திரம் இன்றி, படித்தவர்கள் என்று சொல்லப்படுகின்றவர்களிடத்திலும் சுலபமாகச் செலுத்தி வருகின்றனர். பூசாரிகள், மனிதர்களின் வாழ்நாளின் நிலைமையைக் காட்டுவதற்கென்று ஜாதகங்களைக் கணித்து வருகின்றனர்; அதோடு வாழ்நாளில் நிகழவிருக்கும் தீமைகளைப் போக்கும் பொருட்டுப் "பிராயச்சித்தம்" என்னும் பெயரால் பல வகையான மந்திர தந்திரங்களையும், சடங்குகளையும் கைக்கொண்டு ஜன சமூகத்தை ஏமாற்றி வருகின்றனர்.

அற்ப சம்பவங்களிலிருந்தெல்லாம் நற்சகுனமென்றும், துற்சகுனமென்றும் ஏற்படுத்திக் கொண்டு, தொடங்கிய காரியங்களுக்கெல்லாம் அவைகளைப் பார்க்கின்றனர். தெருவில் நடக்கும்போது ஒரு பூனை வலமாதலையும், இடமாதலையும் கண்டு, அதனால் நல்லது கெட்டது உண்டாகும் என்று கருதப்படுகின்றது. ஒரு காரியத்தை உத்தேசித்துப் போகும் போது ஒரு கைம்பெண் எதிரே வரின் கெட்ட சகுனமாம். அதனால் உத்தேசித்துச் செல்லும் காரியம் கைகூடாதாம்; ஆனால் ஒரு கட்டுக்கழுத்தி, அதுவும் நிறைந்த நீர்க்குடத்துடன் எதிர்ப்படுவாளானால் அது மிகவும் மேலான நற்சகுனமாம். அதனால் உத்தேசித்துச் செல்லும் காரியம் சடிதில் முட்டின்றி நிறைவேறிடுமாம்! வாரத்தில் ஒரு சில நாட்கள் தாம் நல்ல நாட்களாம்; ஏனையவை சூலம் கொண்ட கொடிய நாட்களாம்!

இம்மாதிரியான மூடத்தனமுள்ள சகுன நம்பிக்கைகள் எண்ணிக்கையில்லாமல் இருக்கின்றன. இவைகளையெல்லாம் இந்தியர்களுக்கு, அவர்கள் அறிந்திருந்தாலும் அறியாதிருந்தாலும் கூட வருத்தத்தையும் பயத்தையும் உண்டாக்குகின்றன. இம்மாதிரியான மூடக் கொள்கைகளாகிய வித்துக்களை இளைஞர்களின் மனதில் சிறு வயதிலே விதைத்துவிடுவதால், அவைகள் அவர்களிடத்தில் நன்றாக வேரூன்றிச் செழித்துக் கிளைத்து வளர்ந்து வருகின்றன; அவர்கள் பெரியவர்களான பிறகு அவைகளை அகற்றுவதென்றால் முடியாத காரியமாகி விடுகிறது.

மனிதனின் வாழ்நாளில் நிகழப்போகும் சம்பவங்களை முன்னரே தெரிவிக்கும் சாஸ்திரங்களிலெல்லாம், ஏதோ நக்ஷத்திரங்களின் இருப்பைக் கொண்டு கணிக்கப்படுவதாகக் கூறும் ஜோதிட சாஸ்திரமே மிகச் சாதாரணமாகவும், அதி முக்கியமானதாகவும் கருதப்படுகின்றது. அதிகக் கல்வி கற்றுத்

Filmed as bound.

தேர்ச்சி பெற்ற மேனாட்டு அறிஞர்களிலும் கூட அநேகர் இந்தச் சோதிடத்தில் அதிக நம்பிக்கையுடையவர்களாக இருக்கின்றனர். ஒவ்வொரு வருஷ ஆரம்பத்திலும் அந்த வருஷத்தில் நிகழப்போகும் முக்கியமான சம்பவங்கள் என்னவென்பதையும், எவரெவர் சாகப் போகின்றனர், பருவ காலங்கள் என்னநிலைமையிலிருக்கப்போகின்றனவென்பனபோன்ற விஷயங்களையும், பிரபலமாகப் புஸ்தகங்களில் அச்சிட்டு வெளியிடுகின்றனர். சோதிடத்தின் மூலமாகப்பொருள் பறிப்போரைத் தண்டிக்க இங்கிலாந்து தேசத்தில் சட்டம் இருந்தபோதிலும், அங்நாட்டில் உள்ள அநேகர் இன்னும் சோதிடத்தைக் கையாடிவருவதைக் காணலாம். அநேக நாவல்கள்—ஏன்—ஸ்காட் எனும் பேர்பெற்ற நாவலர் எழுதிய "கை—மேனரிங்" "க்வெண்டின் — டர்வார்ட்" எனப்படும் நாவல்களில்கூட இந்தச் சோதிட விஷயம் கையாளப்பட்டிருக்கின்றது. ஆகாயத்தில் ஆகர்ஷண சக்தியால் பல்வேறு கதிகளில் செல்லாநின்ற இந்தநட்சத்திரக்கூட்டங்களுக்கும், ஓர் மனிதனுடைய வாழ்நாளின் சம்பவங்களுக்கும், எப்படிச் சம்பந்தம் ஏற்பட்டதென்பதும், அவற்றை இவர்கள் எவ்வாறு அறிந்து இத்தனை நம்பிக்கையோடு கையாளுகின்றனர் என்பதும், அறிவிற்கே எட்டாததாக இருக்கின்றது. ஆனால் இந்த சோதிட கணித சாஸ்திரம் எல்லாத் தேசங்களிலும் கையாளப்படுவதோடு, அந்த விஷயத்தைத் தவிர மற்ற விஷயங்களில் மிக்கத் திறமையும், புத்தி நுட்பமும் உள்ள பலரால் நம்பப்பட்டு வருகின்றதென்பதும் உண்மையேயாகும்.

எந்த அறிவாளியும் ஒரு விஷயம் ஏறக்குறைய சற்றேனும் தனது பகுத்தறிவிற்கு எட்டக்கூடியதாக இருந்தால் "முற்றிலும் நம்பத்தகாதது" எனக் கூறமாட்டான் என்பது உண்மை. இதனால்தான் வெளி மாத்திரம் மூட சித்தாந்தங்களாகவிருந்த பல கொள்கைகள், பின்னால் அறிஞர்களால் நன்கு ஆராய்ந்துணரப்பட்டு அவற்றிலுள்ள உண்மைத் தத்துவங்கள் வெளியாக்கப்பட்டன. உதாரணமாகச் சூரியப் பிரவேசத்துள் காணப்படும் பலவித மங்குல் புள்ளிகளுக்கும், பருவக் காற்றுகளுக்கும் ஏதோ சம்பந்தம் இருப்பதாகக் கூறப்பட்ட சித்தாந்தத்தைப் பின்னால் பௌதீக வானசாஸ்திரிகள் நன்கு பரிசோதனை செய்து அதன் உண்மைத் தத்துவத்தை விளக்கினார்கள். "சூரிய வெளிச்சம் நமது தேகத்தில் நேராகப் படாவிடினும் அதனால் நமது இரத்தத்தில் மாறுதல் ஏற்படுகின்றது" என்ற விஷயமும் சாதாரணமாக நம்பத்தக்கதாக இல்லை. ஆனால் தேக சாஸ்திர விற்பன்னர்கள் சில வியாதிகளுக்கு மூலகாரணமாக இருக்கும் கிருமிகள், இரத்தத்தை இரவில் பரிசோதிக்கும்போதுதான் புலப்படுகின்றதென்பதையும், பகலில் அவை காணப்படுவதில்லையென்பதையும் தங்களுடைய ஆராய்ச்சியினால்நிரூபித்திருக்கின்றனர். இருந்தபோதிலும், இம்மாதிரியான வெளிக்கு நம்பத்தகாத விஷயங்களையும், விஞ்ஞான தத்துவ முறைப்படி ஆராய்ந்தறியப்படும்வரை நம்பாமலிருத்தல் சால ஏற்புடையதாம்.

சோதிடத்திற்கும், முற்கூறியவாறு ஏதாவது அடிப்படையான உண்மைத் தத்துவங்களிருப்பின், அவற்றிற்குள்ள சம்பந்தங்களை விஞ்ஞான முறையாக எடுத்துக் காட்டினாலன்றோ அது உண்மையென்று கொள்ளப்படும்? முதலாவதாக அவ்வித அடிப்படையான தத்துவங்களிருக்கின்றன வென்பதற்குச் சரியான-அதாவது இவைகள்தான் என்ற குறிப்பான—இதுவோ அதுவோ, வென்ற சந்தேகங்களுக்கு இடம் இல்லாத—ஆதாரங்கள் இவைகள்தான் என்று நமக்குத் தெரிய வேண்டும். பார்க்கப் போனால் இந்தச் சோதிடர்கள், இரண்டு மூன்று விதமாகப் பொருளைத் திரித்தும், மறித்தும் கூறும் புரட்டு மொழிகளை முதன்மையாக கையாளுவதோடு, அவர்கள் கூறும் சோதிடமானது பல பொருள்படும் மிக்க சாமர்த்தியமான வாக்கியங்களினாலேயே அமைக்கப்பட்டிருப்பதும் வெளிப்படையாகத் தெரியும். இன்னும் இந்தச் சோதிடர்கள் குறிப்பாக வெளியிடும் ஆதாரமுள்ள விஷயங்களில் உண்மையாக நடப்பவை எத்தனை? பொய்யாகப் போகின்றவை எத்தனை? என்பவைகளையும் கணக்கிட்டு, எவை அதிகமாக இருக்கின்றன என்பதைக் கண்டு தெரியவேண்டும். தவிர—அவ்வளவு முக்கியமன்றெனினும்—எந்தெந்த நட்சத்திரங்கள் எவ்வெவ் விதமாக மனிதர்களுக்கு நன்மை தீமைகளைத் தருகின்றனவென்ற சித்தாந்தம் விளக்கமாகத் தெரிய வேண்டும். மேலும் அவற்றிற்கு மாறுபாடாகக் கூறப்படும் எதிர்ப்புகளுக்கேற்ற சாதனங்களும் அளிக்கப்பட வேண்டும். இந்தப் பூலோகத்தில் வாழும் மாந்தரை ஒன்றாக எடுத்துக் கொண்டோமானால், சாதாரணமாக ஒரு வினாடியில் இருபது அல்லது முப்பது [30] குழந்தைகள் ஜனனமெடுக்கின்றன. அவைகள் யாவும் சோதிட சாஸ்திரப் பிரகாரம் ஒரே நட்சத்திர பாதத்தில்தான் பிறந்ததாக கொள்ள வேண்டியிருப்பதால், அவைகள் ஒரே மாதிரி உருவத்தோடு பிறந்து, ஒரே தன்மையில் வாழ்ந்து, ஒரே காலத்தில் இறக்கவும் வேண்டுமன்றோ! உலக வழக்கில் அவ்வாறு இருக்கின்றதா? தவிர, அநேக விஷயங்கள் புதிது புதிதாகக் கண்டுபிடித்து வருகின்றனர். ஏன், மரணத்தைத் தருவதான அநேக நவீன முறைகளும் தற்காலத்தில் சாதாரணமாகக் கையாளப்படுகின்றன. இவைகளை எல்லாம் முறை தவறாமல் ஆகாயத்தில் விரைந்தேகும் நட்சத்திரங்களுடன் சம்பந்தப்படுத்துதல் பொருத்தமுடையதல்லவென்பது வெளிப்படை.

மேற்குறித்தவைகளைத் தவிர, ஏனைய காரணங்களால், தக்க அத்தாட்சிகளில்லாத சோதிட சாஸ்திரத்தை இன்னும் மறுக்க முடியாத ஆதாரங்கள் இருந்தாலொழிய, அறிவாளிகள் நம்பமாட்டார்களென்பது திண்ணம். இந்தச் சோதிடத்தை இத்தனைகாலமாக எவ்வளவோ மக்கள் நம்பிக்கையோடு கையாண்டுவருகின்றார்கள் என்பதாலேயே அது சோதிட சாஸ்திரத்திலுள்ள உண்மைத் தத்துவத்தை ஒருசிறிதும் விளக்குவதாகாது; அது மக்களின் அறிவு, இன்னும் பரந்தநோக்கம்பெறாமல் குழந்தைப்பருவத்திலே இருக்கின்றதென்பதைத்தான் உணர்த்துவதாகும்.

சோதிடத்திலுள்ள உண்மைத் தத்துவத்தை, உள்ளபடி ஒரு மோசடியான சாஸ்திரமென்றே, கூறவேண்டியிருக்கிறது. அதில்

(தொடர்ச்சி 15ம் பக்கம் பார்க்க)

# சென்னை யாருக்கு?

சென்னையைத் தலைநகராகக் கொண்ட ஆந்திர மாகாணத்தை உடனடியாக அமைக்கவேண்டும் என்பது ஆந்திர சகோதரர்களின் கோரிக்கை. இதைக் கோரிக்கை என்று சொல்வதைவிட பேராசை என்று கூறுவதுதான் பொருந்தும். பிழைபட்ட அபிப்பிராயத்தினின்றும், அர்த்தமற்ற அசூசையின்காரணத்தாலும், காரணமற்ற அழுக்காறுகளினின்றும், ஒருசில ஆந்திரக் காங்கரஸ் தலைவர்களின் பதவி மோகத்தின் அடிப்படையினின்றும் முளைத்து எழுந்ததுதான், இன்று விஷக் காற்றை அள்ளி வீசும் மரமாக வளர்ந்திருக்கும் ஆந்திர மாகாணப் பிரிவினைக் கோரிக்கை.

முன்னேறவேண்டும் என்ற ஆசையின் விளைவாகவும், பிற மாகாணங்களுடையவும், மற்ற இனத்தவர்களுடையவும், அரசியல், சமூக, பொருளாதாரப் பிடிப்புகளினின்று விடுதலை பெற வேண்டும் என்ற உரிமை வேட்கையின் அடிப்படையிலிருந்து பிரிவினைக் கோரிக்கை உதயமாகுமானால் வரவேற்கத்தக்கதும், போற்ற வேண்டியதுமாகும். ஆனால், ஆந்திரமாகாணப் பிரிவினை கோரிக்கையோ, அரசியல் அரங்கில் இடம் பெறவேண்டுமென்ற ஆசைகொண்டோரால் வீசப்படும் துருப்புச் சீட்டு!

ஆந்திரா தனி மாகாணமாக உடனடியாகப் பிரிக்கப்படவேண்டும் என்று வலியுறுத்தப்பட்ட காலத்தையும், அதற்காக வடநாட்டுக்கு காவடி தூக்க ஆரம்பித்த காலத்தையும் பார்த்தாலேயே தெரியும், இதை முன்னின்று மொழிபவர்களின் பதவி மோகம். சென்னையில் காங்கரஸ் மந்திரிசபை ஆட்சி நடத்தத் துவங்கிய ஆரம்பத்திலேயே, முதலமைச்சர் பீடத்தை ஆந்திரக்காரரான பிரகாசத்திடம் ஒப்படைத்தார்கள். இந்தப் பட்டமளிப்பு "நமக்குத்தான் ஆட்சி நடத்தும் திறமை இருக்கிறது" என்ற கர்வத்தையும், மமதையையும் பல ஆந்திரர்களிடையே எழுப்பிவிட்டது, பிரகாசத்தின் திறமையற்ற ஆட்சியின் காரணமாக நாட்டில் லஞ்சமும், கள்ளமார்க்கெட்டும் தலைவிரித்தாடவே அவர்மீது நம்பிக்கையில்லை என்று நீக்கிவிட்டு ஒரு தமிழரை—ஓமந்தூராரை—தலைமைப்பீடத்தில் ஏற்றி வைத்தார்கள். இந்தத் தலைமைப் பீட நீக்கம் ஆந்திரர்களுக்குத் தமிழர்கள் செய்த தீங்கு என்றும், துடைக்கமுடியாத அவமானம் ஆகும் என்று எண்ணிக்கொண்டும், தமிழர்களுடன் சேர்ந்து வாழ்வதில்லை என்ற முடிவுடனும் தனி மாகாணக்கோரிக்கையை வலியுறுத்தவும், அதற்காக வடக்குநோக்கிக் காவடி தூக்கவும் ஆரம்பித்தார்கள். எந்தச் சென்னைமாகாணத் தலைமையமைச்சர் பீடத்தினின்று ஆந்திரக்காரர் விரட்டப்பட்டார்களோ, அதேசென்னையைத்தலைநகராகக் கொண்ட ஆந்திர மாகாணத்தை அமைத்துத் தலைமைப் பீடத்தை ஆந்திருக்கு முடிசூட்ட வேண்டும் என்று சங்கல்பமும் செய்து கொண்டார்கள். இந்த உறுதி வெற்றி பெறுமா அல்லது தோற்றுவிடுமா என்ற பிரச்னைக்கு இங்கு இடமில்லை. ஆந்திரக்காரர்கள் தமிழர்களின் கூட்டுறவினின்று பிரிந்து போகத்தான் வேண்டும் என்று விரும்புவார்களானால் நாமேதும் தடை செய்வதற்கில்லை. ஆனால், ஆந்திரர்கள் சென்னை, ஆந்திரத்தை சேர்ந்தது என்று கூறிக்கொண்டு அது தங்கள் மாகாணத்தை சேரவேண்டும் என்று வாதாடத் துவங்கியிருக்கவே தான் நாம் இந்தப் பிரச்சனையில் தலையிடவும்—சென்னை ஆந்திரத்துடன் சேரக்கூடாது என்று மறுக்கவும்—சந்தர்ப்பம் ஏற்பட்டு விடுமானால் சென்னைக்காக போராட வேண்டியதுமான சூழ்நிலைக்கு வந்திருக்கிறோம்.

* *

மொழிவாரியாக மாகாணங்களை ஏற்படுத்துவது காங்கரஸ்கட்சியின் திட்டங்களில் ஒன்று என்ற அடிப்படையில் தான் ஆந்திர பிரிவினை கோரிக்கையேற்றுக்கொள்ளப்பட்டு அதற்கான பூர்வாங்க நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்பட்டு வழிவகைகளும் வகுக்கப்பட்டு வருகிறதே தவிர அது மக்களின் கோரிக்கை என்ற காரணத்தால் அல்ல. "வெள்ளையன் இந்தியாவை ஒரே ஆட்சியின் கீழ் ஆள்வதற்கு வசதியாக இருக்கும் வகையில் பல்வேறுபட்ட மொழிகளைப் பேசும் முரண்பாடுகள் நிறைந்த இனங்களை ஒன்று சேர்த்து—ஆட்சி வசதியை அடிப்படையாகக் கொண்டு—மாகாணங்களை அமைத்து சர்வாதிகார ஆட்சி நடத்திவந்தான். இனியும் பழைய அமைப்புப்படியே மாகாணங்கள் இருப்பது சரியில்லை. எனவே மாகாண அமைப்பு முறைகளைப் புதுப்பிக்கவேண்டியது அவசியம்தான்" என்று சிலர் வாதிக்கக்கூடும். இந்த வாதத்தை ஒப்புக் கொள்வதாகவே வைத்துக் கொள்வோம். இப்படிப் புதிய மாகாணங்களைஏற்படுத்துவதற்கு, மொழியைமட்டில் அடிப்படையாக கொண்டு விடுதல் போதுமானதாகிவிடுமா? என்பதுதான்கேள்வி. தனித்துப் போகும் ஒரு புதிய மாகாணத்தின் ஆட்சியும், மக்களின் வாழ்வும் சிறப்புற நடந்தேறுவதற்கு, போதிய பொருளாதார வசதியுடையனவாகவும், மக்களிடையே சுமுகமாக நல்லுறவு நிலவுவதற்கு வேண்டிய-சரித்திர ரீதியான இன ஒற்றுமையும், கலாச்சாரம், பழக்கவழக்கங்கள், பண்பாடுகள் ஆகியவைகளில் ஒருமைப்பாடுடையனவாகவும் இருக்கவேண்டும் என்பது அவசியமில்லையா என்பது தான் எழுந்திருக்கும் பிரச்சனை? இந்த சர்ச்சைகளுக்கு தெளிவான விளக்கம் தேடினால், மொழியை மட்டும் முன்நிறுத்தி தனி மாகாணங்களை ஏற்படுத்தும் கொள்கை மதத்தான தவறிழைப்பதாகும் என்பது விளங்கும்.

"மொழிவாரி மாகாணபிரிவினை கொள்கையை கொஞ்சநாட்களுக்கு ஒத்திவைப்பது நல்லது" என்று ஆந்திர பிரிவினையைப்பற்றிய கருத்தறிய மத்திய சர்க்காரால் நியமிக்கப்பட்ட "தார்" கமிஷன், சென்னை மாகாணத்திலுள்ள பல பேரிடம் கலந்து கருத்தறிந்து கொண்டபின் ஆலோசனை கூறியது. ஆந்திரர்களின் காதுகளில் இந்த ஆலோசனைகள் எதுவும் விழாதபடியால், கூப்பாடு போடு

(தொடர்ச்சி 13-ம் பக்கம்)

# குறள் ஆராய்ச்சி

குறள் அதிகாரப் பெயர் வைப்பில் முதலாவதாகக் கடவுள் வாழ்த்து என்று இருப்பது திருக்குறளுக்கு அதிகாரப் பெயர் தந்த கடவுள் கொள்கையை மக்களுக்கு ஊட்டி ஏமாற்றச் சதி செய்தோரின் முயற்சியேயாகும். வள்ளுவர் கடவுள் வாழ்த்துக் கூறவில்லை. ஒப்பற்ற அறிவையும் அவ்வுண்மை அறிவூட்டியவனையுமே வாழ்த்துகிறார் என்று தெளிந்த கருத்தோடு ஆராய்பவர் உணரலாம். வள்ளுவர் அறிவூட்டவேண்டி நூல் இயற்றுங்கால் அவர் எழுதப்புகுந்த தமிழ் மொழிக்கு ஆக்குதற் தலைவனை வாழ்த்திப் போந்தார் என துணிந்துரைக்கலாம். "எழுத்து அறிவித்தவன் இறைவன் ஆகும்" என்ற கருத்துக்கொண்டே முதல் பகுதியில் இறைவன் என்ற சொல்லைப் பெய்துள்ளார் எனின் எவ்விதத் தவறுமில்லை. மேலும் முதற்பாட்டிற்கு ஆதி பகவன் என்று சுயநலமிகள் புகுத்தியதைக் கொண்டு அச்சொற்களுக்குக் கடவுள் என்றோ தாய் தந்தை என்றோ பொருள் கூறிக்கொண்டு அவதியுறவேண்டிய நிலையும் இல்லையாகும்.

அகரமுதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு.

இக் குறளில் காணும் 'பகவன்' முதற்றே உலகு. வட சொல் ஒன்றை மட்டுமின்றி வேறு வட சொல் இவ்வதிகாரத்தின் கண் காணவில்லை. பகவன் என்னும் ஒரு வட சொல்லை-வள்ளுவர் கூறிய சொல்லை நீக்கிவிட்டுப் புகுத்தியுள்ள தன் நிலையிலிருந்துதான் கடவுள் என்றும், கடவுள் வாழ்த்து என்றும் கூறி, வள்ளுவரே கையாளாத கடவுள் என்ற சொல்லை—மக்களிடையே சூத்திரப்பட்டத்தை நிறுவியதை நிலைநிறுத்தி உள்ளனர் என்று உணரலாம்.

அகரம் எழுத்துக்களுக்கு முதல், கடவுள் உலகத்திற்கு முதல் என்பது கருத்தெனக் கூறப்படுகிறது. அகரத்திற்கும் பகவனுக்கும் உவமை கூறுதல் பொருந்தாது என்பது எமது துணிபு. அகரம் எழுத்துக்களில் பொதுவாக நின்று பயின்றுவருகிறது. கடவுள் உலகில் பொதுவாக நின்று பயின்று வருமொன்றல்ல. எடுத்ததற்கெல்லாம் கடவுள் கடவுள் என்று கதறும் கண்மூடிப்பக்தர்களே அன்றி அறிவே முக்கியமானது, அறிஞனே சிறப்புடையவன் என்று கருதும் எந்தப் பகுத்தறிவாளனும் மேற்காணும் உவமை பொருத்தமானதென்று கூற இயலாது.

பேரறிவாளனும் பகுத்தறிவாளனுமான வள்ளுவன் திராவிடரின் திருந்திய கடமை இவை எனக் கூறிய முதற்பகுதியில், முதற்குறளிலேயே பகவன் என்ற வட சொல்லைப் புகுத்தமாட்டான் என்று துணிந்துரைக்கலாம். ஆனால் பகவன் என்ற சொல்லுக்கு பதிலாக அறிவன் என்ற சொல்லே அவர் மொழிந்திருக்க வேண்டும் அதுவே பொருத்தமும் உடையதாகும்.

உலகத்தே மொழி பல உள. அவற்றின் எழுத்துக்கள் எவ்வித முறைவைப்பிலேயும் அமைந்துள்ளனவல்ல. தமிழ் எழுத்துக்கள் மட்டும் அவ்வவ்வெழுத்துக்கள் ஒலி உண்டாகும் இடவரிசைக்களைக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது. அகரம் இடைநின்று பயிலும் மொழி இது வொன்றேயாம். வேறு மொழிகளில் முதல் எழுத்து ஏனைய எழுத்துக்களின் இடை நின்று பயிலுகின்றது என்றுகூற இயலாது. இத்தகைய சிறப்புடையது தமிழ் மொழி ஒன்றேயாகும். ஆகையால் உலக மொழிகளில் தலை சிறந்தது தமிழே ஆகும். இத்தகைய தமிழ் எழுத்துக்களை ஆக்கியவன் தலைசிறந்த அறிஞன் என்றும் முதல் அறிஞன் என்றும் கூறுவதால் தவறதும் இல்லை. மக்கள் காண, அறிய முடிவது எழுத்துக்கள். அவ்வெழுத்துக்களில் முதலாவது அகரம். அதுபோலவே (இத்தகைய சிறப்புடைய எழுத்துகளை ஆக்கிய) முதல் அறிவனை முதலாவதாக உடையது உலகம். "உலகம் என்பது உயர்ந்தோர் மாட்டே" என்றபடி ஏனைய அறிஞர், உயர்ந்தவர்களைக் காட்டிலும் ஏனைய் மொழி ஆக்கியோரினும் முதல் அறிவு உடையவன் தமிழ் மொழி ஆக்கியவன் என்று "அகர முதல் எழுத்தெல்லாம்" எனும் அடிவழியாக அவ்வெழுத்து பயிலும் மொழி ஆக்கிய—தமிழ் எழுத்துக்களை ஆக்கிய அறிஞனைக் குறிப்பிடுகிறார் வள்ளுவர். ஈண்டு உவமைகளும் பொருந்தும். எங்ஙனமெனின். மெய் எழுத்துக்களினூடே அகரம் சேர்ந்து உயிர்மெய் எழுத்தாக்கி மொழியில் சேர்ப்பிக்கும். மற்ற உயிர் எழுத்துக்களிலும் அகரம் பயின்று வருவதை உணரலாம். அதுபோல தமிழரிடையே தமிழ் எழுத்துக்கள் ஆக்கியோனின் அறிவுபயின்று வருகிறது. அவன் அறிவு பயின்று வருவதை அவனே முதல் நின்று பயின்று வருகிறான் என்பதில் மிகையில்லை. மேலும் ஏனைய மொழிகளில் தமிழ் எழுத்துக்கள் நேரடியாக பயின்று வராவிடினும் இம்மொழிச் சொற்கள் பல பயின்று வருவதைக் காணலாம். இதனால் வள்ளுவன் கடவுளை முதல்வன் என்று கூறவில்லை. தமிழ் எழுத்துக்கள் ஆக்கியோனை முதல் அறிவன் என்று முதற்குறளில் குறிப்பிடுகிறான் என்பதே சாலச் சிறப்புடைத்தாகும்.

கற்றதனாலாய பயன்என்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅர் எனின்.

கல்வியினது பயன் கடவுளை வணங்குதலேயாம் என்று கருதப் படுகிறது.

இங்கு வாலறிவன் என்று குறிப்பிட்டது கடவுளை அல்ல. எங்கும் எப்பொழுதும் கண்டு காட்டப் படாத ஒன்று இருப்பதாகவும், அதற்கு வாலறிவன் என்று ஆண்பாலாக்கிக் கூறுவதும் எப்படிப் பகுத்தறிவுக்குப் பொருந்தும். ஆண்பாலாக்கி ஒருவர் கூறினால் மற்றொருவர் அதைப் பெண்பாலாக்கிப் பேசுகிறார். மற்றோர் அதற்குப் பிள்ளை, குட்டி உண்டு எனக் கற்பிக்கின்றனர். மேலும் வால்அறிவன் என்று கூறும் கடவுள் மக்களுக்கும், மிருகங்களுக்கும் ஏனையவற்றிற்கும் மக்களிலும் எல்லோருக்கும் ஏன் ஒரு தன்மைத்தான நன்மைபுரிய இயலவில்லை. வாலறிவன் என்பது தூய அறிவினன் என்பதாம். தனக்கென வாழாது பிறருக்கென வாழும் பேரறிவாளனே தூய அறி

(தொடர்ச்சி 13ம் பக்கம் பார்க்க)

# இயற்கைப் பண்பு என்றும் திரியாது!

நெருப்பு நீராகாது; நீர் நெருப்பாகாது. இயற்கையை மாற்றல் இயலாது; வேண்டுமானால் இயற்கையை நம் நன்மைக்காக நம் விருப்பம்போல், தன்மையை, உருவைப் பயன்படுத்தலாம். ஆனால் இயற்கையை மாற்றுவது முடியாது. இயற்கை இயற்கைதான்.

நன்மையே செய்யும் இயற்கைப் பண்புடையான் தீமை செய்யும் பண்புடையானாக மாறமுடியாது. ஓடுவது நீரின் இயற்கை தன்மை. அணையிட்டு ஓரிடத்தில் தேக்கலாம் ஓடாமலிருக்க. அதனால் அது நீரின் ஓடும் தன்மையை மாற்றிவிட்டதாகாது; இயற்கையும் அதற்குப் பணியாது. பொது நன்மையே, நலனே செய்த—செய்யும் பெரியாரின் இயற்கைப் பண்பு, தீமை செய்ய, பொதுநலனுக்குத் துரோகம் செய்ய முடியாது—இயற்கையும் அதை அனுமதிக்காது. அவரால் இயற்கை மண்டலத்துக்கப்பால் பறக்கவும் முடியாது, கீழே நெளிந்து நீந்தவும் முடியாது; இயற்கையோடு இயைந்தேதான் ஆகவேண்டும்.

வெளிஉருவத் தோற்றத்துள் மயங்கி முடிவு கட்டுவது பயனற்றது; முடியேறி அடிதறிப்பது போன்றதாகும். பாசிபடர்ந்த நீர் தூய்மையற்றது என்பதாக முடிவுகட்டமுடியாது. சேறு நிறைந்த கழனியிலே நெல்முத்து, எழிலற்ற மண்ணிலே எழிலுடைய பொன், ஒளியற்ற கரடுமுரடான கல்லிடுக்கிலே (மலை இடுக்கில்) ஒளிரும் வைரம், குழம்பிய சேற்றிலே களிப்பூட்டும் கமலம், நாம் காணாதவையல்ல; வெளித் தோற்றத்தைக் கண்டு, அதன் விளைவுகளை நாம் மறந்ததுமில்லை —அலட்சியப்படுத்த விரும்புவதுமில்லை.

பெரியாரின் செயல் வெளித் தோற்றத்தில்தீமையாக-கொள்கைக்கு துரோகமாகத் (இஞ்ஞான்று எதிரிகளால் கற்பிக்கப்பட்டவை) தோன்றினும், அது நன்மைக்கப்பால் போகாது; தீமைக்குக் கீழே அடிபணிந்து நெளியவும் செய்யாது. மெய்ப் பொருள் பொதிந்துள்ளது; அதைக் காண்பதுதான் அறிவு. அந்த அறிவோடு ஒத்த பொறுமையும் வேண்டும். பொறுமையின்றேல்........? அறிவிற்கு அழிவு செய்தவர்களாவோம். பொறுமையின்றி ஒறுத்தல் செய்தோமாயின் விளைவு அறிவியக்கத்திற்கு—அறிவியலுக்குத் துரோகம் செய்தவர்களாவோம். பொறுமையோடு தெளிவுபெறாமல் கூவினோமாயின் இயற்கைப் பண்பை அறியாத, அறிவற்ற—நாகரீகம் நேர்மையற்ற மடையர்களாவோம். பொறுமையின்றேல் நாம் இந்நூற்றாண்டில் வாழத் தகுதியற்றவர்களாவோம்.

"ஒறுத்தார்க்கு ஒரு நாளை
இன்பம்
பொறுத்தார்க்கு பொன்றும்
துணையும் புகழ்"—குறள்

பொறுமையினால் இயற்கையின்—அறிவின் தெளிவை இக்குறளிலிருந்து ஓர்ந்து ஆராயுங்கள். தெளியுங்கள். பெரியாரின்செய்கை தீமை செய்யாது என்பதை உறுதியாக நம்புவோமாக. இது இயற்கையின் முடிவு.

"காலம் அவசரப்படுவதுமில்லை, வீணாவதுமில்லை. இறந்தகாலம் எல்லாம் அங்ஙனம் இருந்திராவிடினும், இருக்கவேண்டியவையாகும்" —— இங்கர்சால்

பொறுமையாக இருந்து செயல் காண்போம். முடிவு அவசரத்தில் கட்டப்படுதல்கூடாது.

சூழ் நிலையின் காரணமாக வீரன்நெப்போலியன் எவ்வளவோ பாதிக்கப்பட்டும் கோழையாய்ப் போனதில்லை. அன்பின் அண்ணல் காந்தி தன்னுயிருக்கே ஆபத்து வந்தும், தன்னை கொல்ல—தன் மேல் குண்டுவீசி, குறிதவறி விட்டவனிடமும் கொடூரமாக நடந்து கொள்ளவில்லை. இச் சான்றுகள் இயற்கையின் தன்மையை அறிவுறுத்தப் போதுமல்லவா? வீரன் கோழையாக முடியாது; சூழ் நிலையின் காரணமாக அப்படித் தோன்றினாலும். அதே போல் நன்மை செய்பவன் தீமை செய்யுவுமியலாது, வெளித் தோற்றத்தில் அப்படி காணப்பட்டாலும். ஆகவே இயற்கை—சூழ்நிலையை பொறுமையோடு ஆராய்ந்து முடிவு கட்டவேண்டும்.

பொறுமை அறிவு ஒளிக்கான சாணைக்கல், ஞானக்கடலில்மிதிக்கும் அறிவு கலத்தின் கலங்கரை விளக்கம். அடியில் புதைந்து கிடக்கும் உண்மையை ஒளிவிட்டு ஒளிரச் செய்யும் தூண்டுகோல்.

பெரியாரின் செயலை ஆராய்ந்தால் மலர்ந்திருக்கும் நன்மையை தவிர வாடியிருக்கும் தீமையை காணமுடியாது.

நிலம் அமிழ்ந்தாலும், எரிமலை வெடித்தாலும், கடல் கொந்தளித்தாலும், குன்று கவிழ்ந்தாலும், பெரியார் எதிர்ப்பிலேயே மாய்ந்தாலும் அவர் செய்கை தீமையைச் செய்ய முடியவே முடியாது. என்றாகிலும், எதாகிலும், தீமையாக காணுஞ்செயல் செய்தாலும், நன்மைக்காக இருக்குமே தவிர தீமைக்காக இருக்கவே இருக்காது — இருக்கவுமுடியாது. இயற்கையின் பண்பு அது.

ஆகவே பொறுமையாக நம்மால் ஆராய முடியாவிட்டால், பொறுமையாக நின்று விளைவுகளைக் கண்ட பின்பாகிலும் முடிவுகட்டுவோமாக.

எதிர்ப்பிற்கஞ்சாது, தன்னிலையில் நிற்கும் பெரியார் மலையினும் மாணப் பெரிதாக வெற்றி காண்பார் என்பது என்னுடைய திண்ணமான நம்பிக்கை.

குழம்பிய தோழர்களை பொறுமையோடு ஆராயக்கேட்கிறேன். பொறுமையாக ஆராய்ந்து முடிவு கட்டுங்கள்.

"நிலையில் திரியாது அடங்கி
யான் தோற்றம்
மலையினும் மாணப் பெரிது"
—குறள்.

அவர் வெற்றிக்கு வழுத்தி, அவர்தம் சொல்லுக்குப் பணிவோமாக! அவர் தம் தலைமைக்குப் பணிந்து, அவரைப் பின்பற்றி நடப்போமாக.

—மா. சு. நெடுஞ்சேரலாதன்.

# ஆரியமே நீ வாழ்க!

—(•)—

உளமாரக் கூறுகின்றேன் ஆரியமே நீ வாழ்க! மனம் குளிரக் கூறுகின்றேன், மண்ணுள்ளவரை ஆரியமே நீ வாழ்க! எமது கொள்கைகளுக்கு மழைநீராக விளங்குகின்ற காரணத்தாலே கூறுகின்றேன் ஆரியமே நீ வாழ்க! என்று.

* *

"அந்தப் பானையில் உள்ள நீரை நீ பருகக்கூடாது!''

"ஏன்?''

"அது பிராமணர்களுக்கென்று' தனியாக வைக்கப்பட்டது''

"ஏன் அவர்களுக்குமட்டும் தனிப் பானையில் தண்ணீர்?''

"அவர்கள் உயர்ந்த சாதியினர்''

"ஏன் அவர்கள்மட்டும் உயர்ந்த ஜாதியினராயினர்?''

"அது இறைவனின் கட்டளை''

"ஏன் அதுமட்டும் இறைவனின் கட்டளையானது?'' ஏன்? ஏன்?? ஏன்???

அசையாத நீராக இருந்த எங்கள் இனத்தவரின் அறிவிலே இந்த 'ஏன்' என்ற சிறு துரும்புக் கேள்வியை எழச் செய்து, சிந்தனைக்கு இடமளித்த ஆரியமே நீ வாழ்க!

* *

"அப்பா! நல்ல அழகுடையவளப்பா அவள். அவளுடைய வார்த்தைகள் ஒவ்வொன்றும் அவளது அறிவின் ஆழம் எவ்வளவு என்பதைத் தெரிவிக்கும். என்னுடன்தானப்பா படிக்கின்றாள். ஆனால் படித்த பெண் என்கிற மமதை சிறிதுகூட அவளிடம் காண முடியாது.........

"டேய் கழுதை! போதும் நிறுத்துடா. என்னதான் படித்திருந்தாலும், அழகியாயிருந்தாலும், அவள் சக்கிலி ஜாதிதானடா?''

"உலகம்தானப்பா அவளை அப்படி அழைக்கிறது. ஆனால் அவள் பெண்களின் ஜாதியைச் சேர்ந்தவள்''

"ஆமாண்டா! நீயும் அந்த 'சூனா மானா'க்காரனுங்கமாதிரிப் பேசக் கத்துக்கிட்டிலே. ஒரு கருப்புச் சட்டை தைச்சுத்தாரேன். அதையும் போட்டுக்கிட்டுப்போய் யெங்காவது உதை வாங்கிக்கிட்டுவாடா!''

"கருப்புச்சட்டை போட்டுக்கொள்ள வேணுங்கிற ஆசைதானப்பா! ஆனால் உங்கள் மனம் வேகுமே என்று இத்தனைநாள் பொறுத்திருந்தேன். இனி நீங்கள்கூட தைத்துத்தரவேண்டாமப்பா! முன்னமேயே நான் ஒன்று தைத்து வைத்திருக்கிறேன். எனக்கும் அவளுக்கும் மணமாகும் நாளை தெரிவிக்கிறேன். அப்போது வேண்டுமானால் ஒரு கருப்புசட்டை தைத்துக் கொடுங்களப்பா! நான் போய் வருகிறேன்!''

அரைகுறை சுனா மானாக் காரர்களையும், கொள்கையில் தளராத உறுதியடையும் வண்ணம், நீ இயற்றிய சாதிக் கொடுமைகள் இன்னும் சமுதாயத்திலிருக்கின்ற காரணத்தால் தான், உன்னை வாழ்த்துகின்றேன் "ஆரியமே நீ வாழ்க!'' என்று.

நாங்கள் கூறினோம் ஆரியம் நம்மை பிரித்தது என்று. நாங்கள் கூறினோம் சாதிபல வகுத்தான் ஆரியன் என்று. வெகுண்டனர் காங்கரஸ் தோழர்கள். சாதிமுறை இல்லையெனில் தொழில் முறை தவறாது நடைபெறமுடியாது என்று மழுப்பு வாதம் புரிந்தனர். "நீங்கள் என்ன சொல்லுவது நாங்களே சாதிக் கொடுமைகளை களைகிறோம் பாருங்கள்'' என்று முனைந்து முன்வந்து தீண்டப்படாதவர்களுக்கு கோயில்களை திறந்து விட்டனர். இனி திராவிட கழகத்தாரின் வாய்க்கு பூட்டுகூட போடவேண்டிய அவசியமில்லை. தானாக அடங்கிபோவார்கள் என்று எக்காளமிட்டனர். அவர்களது காரியம் நிறைவேறியதே தவிர கருத்து நிறை வேறவில்லை. திறக்கப்பட்ட கோயில்களில் சில மீண்டும் மூடிக் கொண்டன. இன்னும் பல கோயில்கள் திறந்துவிடப் படவேயில்லை. கதவு திறந்தது. ஆனால் சாதிப் பிரிவு மறையவில்லை. தீண்டப்படாதவன் கோவிலுக்குள் நுழையுமளவுக்கு மட்டும், அதுவும் ஒரு சில இடங்களிலே மட்டும், உரிமை பெற்றானே தவிர, அவனுக்கு சமுதாயத்தில் மற்ற மக்களுடன் சம அந்தஸ்து ஏற்படவில்லை. இந்த நிலையில் திராவிடக்கழகம் ஓங்கி குரலெழுப்புகிறது, "கோவிலைத் திறந்து விட்டால் சாதி ஒழிந்து விடுமா?'' என்று. புரையோடிய புண்ணின் மீது புனுகும் ஜவ்வாதும் தடவிவிட்டால் அதனுடைய கெட்ட நாற்றம் போய் விடுமா! என்று கேட்கிறது திராவிடக்கழகம். அந்த நிலையில் நிமிர்ந்து நின்று திராவிடக் கழகம் கேட்பதற்கு காரணம், ஆரியம் அன்று வகுத்த அந்த சாதிப்பிரிவினைகள் தான். ஆகவேதான் கூறுகின்றேன் எமதியக்கம் வாழவழி செய்த ஆரியமே நீ வாழ்க! என்று.

"ஒரு ஆணுக்கும் பெண்ணுக்கும் மணம் நடக்கும் இடத்தில் புரோகித பார்ப்பனர்களுக்கு அங்கு என்ன வேலை?'' என்ற கேள்வியை நாட்டின் நாலாபக்கங்களிலும் எழுப்பினோம். எங்கள் கேள்வி வைதீகர்களுக்கு வயிற்றெரிச்சலை உண்டு பண்ணியது. கட்டாயம் பிராமணர்களை வைத்தே திருமணம் செய்வது என்று கங்கணம் கட்டிக் கொண்டனர் வைதீகப் பெருந்தகைகள். காத்திருந்தோம். பொறுத்திருந்தோம். இன்று காலம் மாறி விட்டது. "அந்தப் பார்ப்பான் என்ன உட்காரு, எழுந்திரு, காலை மடக்கு, கையை நீட்டு என்றெல்லாம் அதிகாரம் செய்கிறான். அவனுக்கு இங்கு என்ன வேலை?'' என்று பெண்களே கேட்கத் தொடங்கிவிட்டார்கள். நாங்கள் கூறிய அன்றைக்கே உமது புரோகிதத் தொழிலைவிட்டிருந்தால், நாங்கள் இனி பெண்ணுக்கும் மாப்பிள்ளைக்கும் தரகர்களாக இருக்கமாட்டோம் என்று நீங்கள் கூறியிருந்தால், உண்மையாக ஒவ்வொரு திருமணத்திற்கும் கட்டாயமாகப் புரோகிதர்களை இழுத்துக் கொண்டுவந்து நிறுத்தியிருப்பார்கள் எங்கள் இனப்புத்திமான்கள். ஆனால் உனது வற்றாத வஞ்சனை, மாறாத சூழ்ச்சிகள் மறையாது நிலைத்துள்ள காரணத்தால்தான் இன்று சுயமரியாதை திருமணங்களின் எண்ணிக்கை பெருகிக் கொண்டு வருகிறது. ஆகையால்தான் கூறுகிறேன் ஆரியமே நீ வாழ்க! என்று.

அன்று உனது சூத்திரக் கயிற்றை அசைத்தால், காங்கரஸ் பொம்மைகள் ஆடின. பிடியுங்கள் கருப்புச் சட்டைக்காரனை என்று போலீசுக்கு உத்திரவு பிறந்தது. சில பல இடங்களில் சோதனை. சிலருக்கு போலீஸ் நிலையத்தில் இடவசதி—பிறகு விசாரணை—மன்னித்து விடுதலை செய்தல் என்ற நாடகம் நடந்தேறியது. அதன் பலன் தூத்துக்குடி மாநாட்டிலே காண்பதெல்லாம் கருப்புசட்டை மயம் என்ற காட்சி. "கருப்பு சட்டைக் காரனைப்பிடி'' என்றாய். கருப்பு சட்டையைப் போடுவதா என்று கலங்கியவர்களெல்லாம், நான், நீ என்று முந்திக் கொண்டு கருப்புச் சட்டையுடன் உலாவத் தொடங்கினார்கள். பெரியார் ஈ. வெ. ரா, இன்னும் பத்து ஆண்டுகள் "கருப்புச் சட்டை போட்டுக் கொண்டு வாருங்கள்'' என்று படித்துப் படித்துச் சொன்னாலும் ஏற்படாத பலன், உனது ஓரே உத்திரவால் கிடைத்தது. அதனால்தான் கூறுகிறேன், ஆரியமே நீ வாழ்க! என்று.

உனது குலத்தில் உதித்த உத்தமர் ஆச்சாரியார், "நுழைத்தே தீருவேன் கட்டாய இந்தியை'' என்று மார்தட்டிக் கிளம்பினார். "தமிழ் இனிது. எழில் மிகுந்தது. கன்னித்தன்மை மாறாதது. நினைக்குந்தோறும், பேசுந்தோறும் தித்திக்கும்'' என்றெல்லாம் பேசிவந்த பண்டித சிகாமணிகள், புலவர் பெருமக்கள், கவி மணிகள், கவி

# ★ மனிதன் ★

வினா:- மனிதன் என்றால் என்ன?

விடை:- பகுத்தறிவுள்ள ஒரு பிராணி.

வினா:- மனிதன் தோன்றி எவ்வளவு காலமாயிற்று?

விடை:- லட்சக்கணக்கான வருஷங்களாயிற்று.

வினா:- அவனுடைய பூர்வீகர் யார்?

விடை:- முலையுண்ணும் பிராணிகள்.

வினா:- அது உனக்கு எப்படித் தெரியும்?

விடை:- மக்கள் உறுப்புகளின் அமைப்பு, கல்ப்பு, வேலை முறை முதலியவைகளைக் கவனித்தால் மனிதனும் ஒரு பிராணிக்கு ஒப்பாகவே இருக்கிறான்.

வினா:- மனிதனுக்கும் பிராணிகளுக்கும் பொதுவாக இருக்கும் சில அம்சங்களை விளக்கிச்சொல்.

விடை:- மற்றப் பிராணிகளுக்கு இல்லாத தசை நாரோ, எலும்போ உறுப்புகளோ மனிதனுக்கு இல்லவே இல்லை.

வினா:- இவ்வளவுதானா?

விடை:- மனித உடலும், மிருக உடலும் ஒரேமாதிரி பொருள்களாலேயே ஆக்கப்பட்டிருக்கின்றன. இரண்டு உடல்களிலும் ஒரே மாதிரியான அங்க அமைப்பே காணப்படுகின்றன. இரண்டு உடல்களும் ஒரே மாதிரியான ஜனன மரண விதிகளுக்கே கட்டுப்பட்டிருக்கின்றன.

வினா:- இதர பிராணிகளுக்கும் மனிதனுக்கும் ஏதாவது வித்தியாசமுண்டா?

விடை:- அறிவிலும் ஒழுக்கத்திலும் மனிதன் மற்றப் பிராணிகளுக்கு மேலானவனாயிருக்கின்றான்.

வினா:- வேறு வித்தியாசங்கள் உண்டா?

விடை:- பசிப்பிணியைத்தணிக்க மட்டுமே பிராணிகள் முயற்சி செய்கின்றன. மனிதன் தன் லட்சியங்களை அடைய முயல்கிறான்.

வினா:- வேறு ஏதாவதுண்டா?

விடை:- தன் சந்ததிகளுக்கும் எதிர்காலத்தில் பிறக்கப் போகிறவர்களுக்கும் க்ஷேமமுண்டாகும்படி மனிதன் வாழ்ந்து உழைக்கிறான்; மிருகங்களுக்கு எதிர்காலத்தைப்பற்றிய உணர்ச்சியே இல்லை.

வினா:- மனிதனுக்கும் மிருகங்களுக்குமுள்ள சம்பந்தம் என்ன?

விடை:- அவன் மிருகவர்க்கத்திலிருந்து தோன்றினான். அல்லது மிருகவர்க்கத்திலிருந்து அபிவிருத்தியடைந்தான்.

வினா:- மனிதன் மிருக வர்க்கத்திலிருந்து தோன்றி அபிவிருத்தியடைந்தானென்பதற்கு முக்கியமான ஆதாரமென்ன?

விடை:- மனிதக்கரு உயிர் பெறும்முன்பு பல நிலைமைஅடைகின்றன. அப்போது அதற்கு மீன்களுக்கு இருப்பதுபோன்ற மூச்சுக் கருவிகளும், வாலும், பெரிய கால் விரல்களும், உரோமம் அடர்ந்த உடலும், குரங்குக்கு உள்ளதுபோன்ற மூளையும் இருக்கின்றன.

வினா:- அதன் பொருள் என்ன?

விடை:- அந்த நிலைமையை எல்லாம் கடந்தே மனிதன் தற்கால உருவத்தை அடைந்தான் என்பதே பொருள்.

விடை:- தற்காலம் காணப்படும் மிருகங்களைப்போல் மனிதனும் ஒருகாலத்தில் மிருகமாயிருந்தான் என்று நீ கூறுகிறாயா?

விடை:- நெடுங்காலம் அவன் குரங்கைப்போலவும், கொரில்லாக் குரங்கைப்போலவும், பெரிய வாலில்லாக் குரங்கைப்போலவும் இருந்துவந்தான்.

வினா:- எந்தக்காலத்தில் அவன் அவ்வாறு இருந்தான்.

விடை:- திட்டமாகக் கூறமுடியாது. ஒருக்கால் லக்ஷோபலக்ஷம் வருஷங்களுக்கு முன்பு இருக்கலாம்.

வினா:- அப்படியானால் மனிதன் பிரத்தியேகமாக சிருஷ்டிக்கப்படவில்லையா?

விடை:- இல்லை அவன் கீழ்த்தரப்பிராணியாக இருந்து நாளாவட்டத்தில் முன்னேறினான்.

வினா:- மிருகம் மனிதனாக மாறுவதை எப்பொழுதாவது யாராவது கண்ணாரக் கண்டதுண்டா?

விடை:- இல்லை. இயற்கை இரகசியமாக வேலை செய்கிறது. குறிப்பிட்டுணரமுடியாத பல பருவங்களைக் கடந்து காலக்கிரமத்தில் சிறுகச் சிறுக மனிதன் கீழ்த்தரப் பிராணியிலிருந்து முன்னேற்றமடைந்திருக்கிறான்.

வினா:- அவனது உடல்மட்டும்தானா இவ்வாறு முன்னேற்றமடைந்து வளர்ச்சியடைந்திருக்கிறது?

விடை:- இல்லை. அவனது உடலைப் போலவே அவனது மனம் அல்லது பகுத்தறிவும் காலக்கிரமத்தில் சிறுகச் சிறுக முன்னேற்றமடைந்து வந்திருக்கிறது.

வினா:- எல்லாப் பிராணிகளும் முன்னேற்றமடைந்து ஏன் மனிதராகவில்லை?

விடை:- எந்தக் காரணத்தினால் காட்டாள ஜாதியாரெல்லாம் நாக

(தொடர்ச்சி 10ம் பக்கம் பார்க்க)

---

வாணர்கள் இருந்த இடம் தெரியாது மறைந்தனர். அப்போது நாட்டிலே செல்லாக்காசிற்கு இருந்த மதிப்புக் கூட இல்லாதிருந்த தாலமுத்து நடராசன்கள் சிறை புகுந்தனர் தமிழைக் காக்க. சிறைவாசம் அவர்களது உயிரைப் பருகியது. அவர்களின் ஆவி பிரிந்த நேரத்திலே, நீ ஆனந்தக் கூத்தாடினாய். ஆனால் ஆச்சாரியாரின் எண்ணம் மட்டும் ஈடேற முடியவில்லை, ஈரோட்டை எதிர்த்து. இறுதியில் ஈரோட்டிற்கு மயிலை மண்டியிட்டது. அதன் பயன்தான் இன்று தமிழிலே பேசுதல், தமிழிலே கொஞ்சுதல், தமிழிலே பண்ணிசைத்தல், தமிழிலே நினைத்தல் என்ற அளவுக்கு வளர்ந்து மாறியுள்ளது. அதன் பயன்தான், 'க்ஷேமம் க்ஷேமத்திற்கு' என்பது 'நலன். நலனறிய' என்று மாறியுள்ளது. 'விவாக சுபமுகூர்த்தப் பத்திரிகை' 'திருமண அழைப்பிதழாக' திருந்தியுள்ளது. இத்தனை மாட்சிக்கும் காரணம் உனது கட்டாய இந்தி முறைதான். மீண்டும் அதே ஆயுதத்தைப் பிரயோகிக்க ஆரியமே! நீ ஆரம்பித்துவிட்டாய். இதனுடைய முடிவு, திராவிட மக்கள் வாழ்வதா? அன்றி சாவதா? என்பதுதான். உனது கொடுமைகள் அதிகரிக்க அதிகரிக்க, நமது இயக்கம் வளராது இருக்க முடியாது. ஆகவேதான் கூறுகிறேன் ஆரியமே நீ வாழ்க என்று.

—ஏ. ஜம்பு

# குடி அரசு

3—9—49 சனிக்கிழமை.


## பிழைத்துப் போகட்டும்!

அறிஞர்கள் என்று பெயர் கொடுக்கப்பட்டு, அது சிலகாலம் வழக்கத்திலும் வழங்கிவிடுமென்றால், பிறகு அந்த "அறிஞர்கள்" என்பவர்கள் அறிஞர்கள் என்கிற பட்டத்தையே கைமுதலாகக் கொண்டு, எவ்வளவு பிற்போக்கான நடவடிக்கைகளையும்துணிச்சலுடன் மேற்கொள்வதைப் பார்க்கிறோம். அந்த நேரத்திலும் 'அறிஞர்கள்' என்கிற அந்தப் பட்டம் தங்களுக்கு நல்ல பாதுகாப்பாகவே இருந்துகொண்டிருக்கும் என்றும் நம்புகிறார்கள். இப்பேர்ப்பட்டவர்களின் இந்த நம்பிக்கை, இந்த நாட்டில் பெரும்பாலும் பொய்ப்பித்துவிடுவதில்லை.

ஆந்திரப்பல்கலைக்கழகத்துணைவேந்தர் தோழர் சி. ஆர். ரெட்டி அவர்கள், இந்தப் பட்டியலில் இப்போது தம் பெயரையும் பதிவு செய்துகொண்டிருக்கிறார்.

தோழர் ரெட்டி அவர்கள் சென்னைப் பல்கலைக் கழகப் பொது மன்றத்தில் சில விரிவுரைகள் ஆற்றுவார் என்கிற வரிசையில், பேசிவரும் பேச்சுக்களினாலேயே இந்தப் பதிவைப் பதிந்துகொண்டிருக்கிறார்.

மக்கள் மன்றத்தில் காங்கரஸ் நாளுக்கு நாள் கரைந்துகொண்டு வருகிறது. மேலும் மேலும் சாயம் வெளுக்காமல் இருப்பதற்காகத் தலைமைப் பீடத்தில் இருப்பவர்கள் பயத்தினாலும் நயத்தினாலும் என்னென்ன காரியங்களையெல்லாம் செய்ய முடியுமோ அவ்வளவையும் செய்து கொண்டிருக்கிறார்கள். அப்படியும் அந்த முயற்சிகள் ஒன்றும் பலன்தரவில்லை. நாளுக்குநாள் மக்கள் காங்கரஸ் என்பதை மறந்து கொண்டுவருகிறார்கள் என்பதுகூட இல்லை, வெறுத்துக் கொண்டு வருகிறார்கள். இந்த உண்மையை, நாட்டில் அவ்வப்போது நடந்து கொண்டிருக்கும் நிகழ்ச்சிகளே மெய்ப்படுத்தும். இருந்தும் தோழர் ரெட்டி அவர்கள் பலமாகத் தாங்குகிறார் காங்கரசை.

"மற்ற கட்சிகளை நசுக்கவோ, அதிகார பலத்தைக் கொண்டு பதவியில் ஒட்டிக் கொண்டிருக்கவோ காங்கரஸ் ஆசைப்படவில்லை" என்பது தோழர் ரெட்டி அவர்களின் கண்டு பிடிப்பு-பாராட்டுரை.

"இந்தியாவிற்கு வழி காட்டுவதற்கென்றே அவதரித்த நேரு, பட்டேல் போன்ற தலைவர்கள் ஜனநாயக தத்துவப்பிரகாரம் மத்திய அரசாங்கத்தை நிர்வகிக்கின்றனர்" என்பது மேலும் அவர் கூறும் புகழுரை.

இவற்றில், மற்ற கட்சிகளும்—காங்கரசும் என்கிறதான தொடர்பை எடுத்துக் கொண்டால், காங்கரஸ் மற்ற கட்சிகளை நசுக்குவதற்கு, ஆட்சியில் புகுவதற்கு முன்பு எந்தெந்த முறைகளைக் கையாண்டது, ஆட்சியில் ஏறி அமர்ந்தபின் என்னென்ன முறைகளைக்கைக்கொண்டுவருகிறதுஎன்பதை யாரும் சொல்லித்தெரிய வேண்டிய அவசியத்தில் இல்லாமல் நாடே சிரிப்பாய்ச் சிரிக்கிறது. எங்கு திரும்பினாலும், எப்பக்கம் பார்த்தாலும் 144. 144-தடை போடப்படாத ஊர் என்றாலே காங்கரஸ் ஆட்சியில், மதவாதிகள் கருத்தின்படி, அது ஒரு பாவம் செய்த ஊர் என்பதான எண்ணம் உண்டாக்கப்பட்டிருக்கிறது. இந்த 144-கள் யாருக்கு?

ஆட்சியில் புகுவதற்கு முன்பு இந்த நாட்டில் காங்கரஸ் என்பதாகத்தான் ஒருகட்சி இருக்கிறதே தவிர-இருக்க முடியுமே தவிர, முஸ்லீம்லீக்கோ--கம்யூனிஸ்டோ-சோஷியலிஸ்டோ—என்பதாகவெல்லாம் கட்சிகளே கிடையாது-இருந்தாலும் ஒப்புக்கொள்ள முடியாது என்றே பச்சையாகப் பேசி வந்தது காங்கரஸ், நடத்தையிலும் அந்தப் பிரசாரத்தை ஒட்டியே நடந்து கொண்டு வந்தது. இதனைத் தோழர் ரெட்டி அறியாதவரல்ல. ஆட்சியில் அமர்ந்த பிறகும் இந்தக் கருத்து வலுவாகி, மற்ற கட்சிகளை ஒடுக்கும் வகையில் மிக மிகத் தீவிரமாக அதிகாரங்களையும் துணைக்கழைக்கப்படுகிறது. அவற்றைப் பார்த்துக் கொண்டு வருகிற தோழர் ரெட்டி தான் கூறுகிறார், அதிகார பலத்தைக் கொண்டு பதவியில் ஒட்டிக் கொண்டிருக்க காங்கரஸ் ஆசைப்படவில்லை என்பதாக.

நம் மாகாணத்தில் அண்மையில் நடந்து முடிந்திருக்கும் ஜில்லா போர்டு தேர்தலை எடுத்துக்கொண்டாலே போதும்.

வயது வந்தவர்களுக்கு வாக்குரிமை என்கிற அடிப்படையில் ஒரு பெரும் பொதுத் தேர்தலே நாடு முழுவதும் மிக விரைவாக நடத்தப் போகிறோம் என்று சொல்லி, அதற்கான பூர்வாங்க வேலைகளும மற்றொரு பக்கத்தில் நடந்து கொண்டிருக்கும் போது, மிக மிக அவசரமாக, குப்பைக் கூடையில் போடும் தகுதியுடைய ஓட்டர் லிஸ்டை வைத்துக் கொண்டு, ஜில்லா போர்டுகளுக்கு ஏன் இப்போது தேர்தல் நடத்த வேண்டும்?

நடத்தும் தேர்தலில் காங்கரஸ் கட்சியின் பேரால் மாகாணம் முழுவதிலும் ஏன் அபேட்சகர்களை நிறுத்த வேண்டும்?

ஸ்தலஸ்தாபனங்களின் வேலையில், எந்த வேலையையாவது கட்சியின் செல்வாக்கில் இருந்து கொண்டுதான் செய்து ஆகவேண்டியிருக்கிறது என்று ஏதாவது ஒன்றைக் குறிப்பிட்டுச் சொல்லிவிட முடியுமா?

கட்சியின் வலுவினால்—மெஜாரிட்டியினால் சாதிக்க வேண்டிய காரியம் என்பதாக ஒன்றுகூட இல்லாத ஸ்தலஸ்தாபனங்களுக்குப் பத்தாம் பசலி லிஸ்டை வைத்துக்கொண்டு தேர்தலை நடத்தும் போது; காங்கரஸ் மந்திரிகள் என்பவர்கள், காங்கரசுக்கே ஓட் செய்யுங்கள் என்பதாக சர்க்கார் செலவிலேயே சுற்றுப்பிரயாணமும் செய்து கொண்டு பிரசாரமும் செய்தார்கள் என்றால் இந்த நிகழ்ச்சிகள் எதைக் காட்டுகிறது என்று கேட்கிறோம்?

51 அல்லது அதற்குப் பின்பு

நடத்தப் போகிறோம் என்கிற பொதுத் தேர்தலுக்கு, ஜில்லா போர்டுகளின் ஆதிக்கம் தூண்களாக நின்று தாங்கவேண்டும் என்பதைத் தவிர இந்த ஜில்லா போர்டுத் தேர்தலுக்கு வேறு அர்த்தமோ வேறு உண்மையோ இல்லவே இல்லை. அப்படியிருந்தும் தோழர் ரெட்டி கூறுகிறார் அதிகார பலத்தைக் கொண்டு பதவியில் ஒட்டிக்கொண்டிருக்க காங்கரஸ் ஆசைப்படவில்லை என்று.

சரி. தேர்தல் நடந்து முடிவுகளும் வெளியாகி இருக்கின்றன. காங்கரசுக்குச் செய்யப்பட்ட பிரசாரத்தைப் போல—செலவு செய்யப்பட்ட பணத்தைப் போல—ஒத்துழைத்த அதிகாரிகளைப் போல, தேர்தல். போட்டியில் கலந்து கொண்ட மற்றவர்களுக்கு வசதி இல்லை; செய்யவும் முடியாது. சுயேச்சையாக நின்ற ஒவ்வொருவரும் தேர்தலுக்காகச் செய்த முயற்சிகளை எடுத்துக் கொண்டால், அதைப் போல நூறு மடங்கு, ஆயிர மடங்கு என்று சொல்லவேண்டிய அளவிலேயே காங்கரஸ் அபேட்சகர்களுக்கு முயற்சி செய்யப்பட்டு வந்திருக்கிறது.

அப்படியெல்லாமிருந்தும் கூட இரண்டொரு ஜில்லாக்களில் காங்கரசுக்கு மெஜாரிட்டி இல்லை. பல ஜில்லாக்களில் ஒண்ணுக்கு முக்கால் என்கிற அளவில்கூட வெற்றியில்லை. வெற்றி பெற்றவர்களில் பலர் சுமாரான ஓட்டுகளே அதிகம் பெற்றிருக்கின்றனர். இதைக்காட்டிலும் காங்கரசைத் தோற்கடித்த பலர் அதிகமான ஓட்டுகளால் வெற்றிபெற்றிருக்கின்றார்கள் என்றெல்லாம் தேசிய ஏடுகளே கூறி அலறும்படியான நிலைமையைப் பார்க்கிறோம். இந்த நிலைமை எதைக் காட்டுகிறதென்றும் கேட்கிறோம்.

மாகாண சர்க்கார் சம்பந்தப்பட்ட, இந்த நடத்தையைக் காங்கரசின் நடத்தையாக ஏற்கமுடியாது. மத்தியசர்க்கார் நடத்தையில்தான் ஜனநாயகம் வழிந்து ஒழுகுகிறது என்பதாக தோழர் ரெட்டி கூறலாம்.

அண்மையில். சட்டசபைக்கு நடந்துமுடிந்த கல்கத்தா உபதேர்தலையே எடுத்துக்கொள்ளலாமே. மாகாண சட்டசபை ஒன்றுக்கு காங்கரஸ் கட்சியின்பேரால்நிற்கும் அபேட்சகரை ஆதரித்து, மத்திய சர்க்காரின் பிரதமரும் உதவிப் பிரதமரும் அறிக்கைகள் விடுத்து, காங்கரஸ் அபேட்சகரைத் தேர்ந்தெடுக்கச்சொல்லி, மக்களைத் தூண்டினார்கள் என்றால் அது எந்த ஜனநாயகமாகும்? அப்படியிருந்தும் அந்த அபேட்சகர் படுதோல்வி அடைந்தது எதைக் காட்டுகிறது?

இந்தியாவிற்கு வழி காட்டுவதற்கென்றே அவதரித்தவர்களாம் நேருவும் பட்டேலும். இது ரெட்டியின் புகழுரை.

இந்தப் புகழுரையைத் தரும் ரெட்டி, அன்றையப் பேச்சிலேயே, "நம் நாட்டிலோ பிரதமர் கட்சியின் ரப்பர் ஸ்டாம்பாகவே இருக்கிறார்" என்பதாக, பிரதமரின் வழி காட்ட முடியாத நிலைமையையும் விளக்குகிறார். மேலும் சில மாகாணங்களில் மந்திரிசபை மீது சாட்டப்பட்ட குற்றங்களுக்கு, காங்கரஸ் கட்சியே விசாரணை செய்வது என்கிற காங்கரஸ் மேலிடத்தின் முடிவை எடுத்துக் காட்டி, இப்பேர்ப்பட்ட விசாரணை நாடகம் எந்த நாட்டிலும் நடைபெற்றதில்லை; பகிரங்கமாகவல்லவா ஒரு நீதிபதியின் முன்னால் வழக்கை நடத்த வேண்டும் என்றும் அவரே அந்த "வழிகாட்டிகளின்" முடிவையும் கண்டிக்கிறார்.

இந்தக் கண்டனங்களுக்குப் பிறகே, அந்த "அவதார புருஷர்களின்" துதியைப் பாடுகிறார் என்றால் அதற்கு என்ன அர்த்தம்?

பாராட்டுரையோடு தோழர் ரெட்டி நிற்கவில்லை, பலமான மத்திய சர்க்கார் வேண்டும் என்கிற சரணத்தோடு முடித்திருக்கிறார் அவர். மாகாண சுயாட்சியின் ஆணிவேரை யெல்லாம் பறித்துவிட்ட ஏகாதிபத்திய மத்திய சர்க்கார் அமைப்பை அவர் மிக மிக அத்யாவசியம் என்கிறார்.

தோழர் ரெட்டி அவர்களின் இரண்டு நாள் பேச்சுகளையும் சேர்த்துப் பார்க்கும் எவருக்கும், அவர்மீது இரக்கம் உண்டாகாமல் இருக்க முடியாது.

மாகாண சர்க்காரில் ஜனநாயகமே இல்லை என்பதை வருணிக்கும் அவர், அதற்குக் காரணமான மத்திய சர்க்காரை ஜனநாயகத்தின் அவதாரம் என்பதாகக் கூறுகிறார். அதே நேரத்தில் மத்திய சர்க்காரின்—தலைமைப் பீடத்தின் நடத்தைகளையும் கண்டிக்க ஆசைப்படுகிறார். இது ஏன்?

சுருக்கமாகச் சொல்ல வேண்டுமென்றால், தோழர் ரெட்டி அவர்கள் ஆந்திரா, மைசூர் என்கிற எல்லைகளை விட்டு விட்டு நீண்ட தூரப் பிரயாணங்களை மேற்கொள்வார் என்பதாக ஏதேனும் செய்தி வருமாயின் அது ஒன்றும் ஆச்சரியப்படுவதற்கில்லை. 'அறிஞர்கள்' என்கிற பட்டியலில் இடம் பெற்ற "சந்தர்ப்பசூரர்" களின் நடத்தைகளுக்கு இது ஒன்றும் மாறுபாடானது என்றும் சொல்ல முடியாது. பாவம்! எப்படியோ பிழைக்கட்டும்.

---

## என் கை கீழே. உன் கை மேலே.

ஒருபார்ப்பன யாசகர்:- அய்யா பிரபுவே யேதாவது தர்மம் கொடுங்கள் உங்களுக்கு மகா புண்ணியமுண்டு.

பிரபு:- போய்வோய், போய் எங்காவது பாடுபடுமேன். மண்ணு வெட்டினாலும் தினம் 8-அணா சம்பாதிப்பீர். கொட்டாப்புளியாட்டமாய் இருந்துகொண்டு வடக்கயிறாட்டமாக பூணூல் போட்டுக் கொண்டு பிச்சைக்கு வறீரே வெட்கமில்லையா?

யாசகக்காரன்:- என்னமோ பிரபுவே தங்கள் கை மேலாகிவிட்டது, என் கை கீழாகிவிட்டது என்னவேண்டுமானாலும் தாங்கள் சொல்லக்கூடும்.

பிரபு:- மேலென்ன, கீழென்ன இதற்காக நீர் ஏன் பொறாமைப் படுகிறீர். கடையில் 10-அணா போட்டால் ஒரு நாட்டு (க்ஷவரக்) கத்தி கிடைக்கும் வாங்கிக்கொண்டு போய் வாய்க்கால் கரையில் உட்காரும்; எத்தனை பேர் தலைக்கு மேல் உம்ம கை போகுதுபாரும் உமக்கென்னத்துக்கு உம்ம கைக்கு மேல் நம்ம கை போகிறதே என்கிற பொறாமை.

யாசகக்காரன்:- சரி நான் போய் வருகிறேன். பகவான் இப்படித் தங்களைச் சொல்லவைத்தான், நம்மளைக் கேட்கவைத்தான் தங்களை நொந்து என்ன பயன்.

பிரபு:- அப்படியானால் அடியுமே அந்த பகவானை. போம் போம் சோம்பேறியே.

(7ம் பக்கத் தொடர்ச்சி)

ரீக மக்களாகவில்லையோ அந்தக் காரணத்தினாலேயே மிருகங்கள் எல்லாம் மக்களாக முன்னேற்றமடையவில்லை.

வினா:- அந்தக் காரணம் ஏது?

விடை:- சாதகமான நிலை.

வினா:- அதை விளக்கிக்கூறு.

விடை:- தேவையே முன்னேற்றத்துக்கு அடிப்படை. சுகமாக வாழ முடியும் வரை மிருகங்களும் காட்டாளர்களும் அந்த நிலைமையிலேயே இருக்கின்றன. ஆபத்துகளினாலோ மரணத்தினாலோ பயமடையும் போதுதான் அவைகளிலிருந்து தப்பித்துக்கொள்ளப் புது மார்க்கங்களைக் கண்டு பிடிக்க முயல்கின்றன.

வினா:- இதைக் கொஞ்சங் கூட விளக்கிக்கூறு.

விடை:- சந்தர்ப்பங்கள் அல்லது நிலைமையைத் தழுவியே மனிதன் அல்லது மிருகத்தின் வாழ்க்கை உருப்பெறுகிறது. சந்தர்ப்பங்கள் அல்லது நிலைமையில் மாற்றமேற்படும் போது மனிதன் அல்லது மிருகத்தின் நிலைமையிலும் மாற்றமேற்படுகிறது.

வினா:- மனித முன்னேற்றத்துக்கு முக்கியமாக உதவி புரிந்தது ஏது?

விடை:- ஜீவிதப் போராட்டமே மற்றவைகளைவிட அதிகமாக உதவி புரிந்தது.

வினா:- மனித உற்பத்தியைப் பற்றி வேறு ஏதாவது அபிப்பிராயமுண்டா?

விடை:- உண்டு. ஆறாயிரம் வருஷங்களுக்கு முன் கடவுள் மனிதனை நினைத்த மாத்திரத்தில் உத்தமனாக சிருஷ்டித்ததாக அநந்தம் பேர் நம்பி வருகிறார்கள்.

வினா:- உத்தமனாக சிருஷ்டித்தான் என்பதின் பொருள் என்ன?

விடை:- கடவுளைப் போலவே மனிதன் தோற்றுவிக்கப்பட்டானாம்.

வினா:- மனிதன் ஒரு காலத்தில் கடவுளைப்போல உத்தமனாயிருந்தானென்று உரிமை பாராட்டப்படுகிறதா?

விடை:- உரிமை பாராட்டப்படுவதாகத் தோன்றவில்லை.

வினா:- அப்படியானால் கடவுளோடு ஒப்பிட்டுப்பார்த்தால் மனிதன் உத்தமனல்லவா? மனிதன் உத்தமனாக படைக்கப்பட்டான் என்று அவர்கள் ஏன் கூறுகிறார்கள்?

விடை:- இல்லை

வினா:- அப்படியானால்

விடை:- ஒரு மனிதனுக்கு எவ்வளவு உத்தமனாக இருக்க முடியுமோ அவ்வளவு உத்தமனாக மனிதன் இருந்தான் என்றே அவர்கள் நம்புகிறார்கள் என நினைக்கிறேன்.

வினா:- இப்பொழுது அவன் ஏன் உத்தமனாக இருக்கவில்லை.

விடை:- கடவுள் கட்டளையை அவன் மீறியதனால் உத்தமத்தன்மையை இழந்துவிட்டதாகக் கூறப்படுகிறது.

வினா:- உத்தமனான ஒருவன் எவ்வாறு குற்றம் செய்வான்?

விடை:- தன்னுடைய பெருமைக்காக அவன் குற்றம் செய்யும்படி சிருஷ்டி கர்த்தா அநுமதித்தாராம்.

வினா:- அப்படியானால் அவன் கடவுள் கட்டளையை மீறாமல் கட்டளைப்படியேதான் நடந்தானா?

விடை:- கடவுள் நோக்கத்தைப் பூர்த்தி செய்யுமாறு கடவுள் கட்டளைப்படியே அவன் நடந்தான்.

வினா:- மனிதன் வீழ்ச்சியடைந்ததினால் ஏற்பட்ட பலன்கள் எவை?

விடை:- எல்லா மக்களுக்கும் பாபம், துன்பம், மரணம் இவைகளே ஏற்பட்ட பலன்கள்.

வினா:- மனிதன் வீழ்ச்சியடைவதற்கு முன் உலகத்தில் தீமையே இருந்ததில்லையா?

விடை:- விஞ்ஞான சாஸ்திரப்படியும், பைபிலின் படியும் உலகத்தில் தீமை இருக்கத்தான் செய்திருக்கிறது. ஏனெனில் ஆதாம் பாவம் செய்யும்படி சாத்தான் தூண்டியதாக பைபிலில் கூறப்பட்டிருக்கிறது.

வினா:- சாத்தானைப்பற்றிய பொதுவான நம்பிக்கை என்ன?

விடை:- சாத்தான் கடவுளுக்கும் மனிதனுக்கும் பெரிய விரோதி என்று பொதுவாக நம்பப்படுகிறது.

வினா:- வேறு என்ன?

விடை:- கடவுள் நன்மைக்கு அதிகாரியாக இருப்பது போல், சாத்தான் தீமைக்கு அதிகாரியாக இருக்கிறானாம்.

வினா:- பேய் எப்பொழுது முதல் இருந்து கொண்டு வருகிறது?

விடை:- கடவுள் தோன்றிய போதே பேயும் தோன்றியிருப்பதாகச் சாமானிய ஜனங்கள் நம்புகிறார்கள்.

வினா:- மக்கள் பேயை நம்பக் காரணம் என்ன?

விடை:- மனித சமூகம் பாலிய தசையிலிருந்த போது வெளிச்சத்துக்கும், இருளுக்கும், ஜீவனுக்கும், மரணத்துக்கும், அன்புக்கும், வெறுப்புக்கும் காரணம் கூறும் பொருட்டு நன்மை செய்ய ஒன்றும், தீமைசெய்ய ஒன்றும் இருப்பதாகவும், அவை இரண்டுமே உலகத்தை அடக்கியாண்டு வருவதாகவும் நம்பிக்கொண்டது.

வினா:- பேய் கடவுளைப்போல அவ்வளவு புத்திசாலியா?

விடை:- இல்லை. பெரிய தந்திரசாலியாம்.

வினா:- பேயின் ஜீவித நோக்கமென்ன?

விடை:- மக்களைக் கெட்டவழியில் செலுத்திக் கெடுத்துக்கடவுள் வேலையை அழிப்பதே.

வினா:- பேய் இருந்து கொண்டு இருப்பதற்குப் பொறுப்பாளி யார்?

விடை:- பொதுவான நம்பிக்கை என்னவெனில் ஆதி மனிதனைப் போல் பேயும் உத்தமனாகவே இருந்ததாம். அது தானும் கடவுளாக வேண்டுமென்று எண்ணியதினால் அது சுவர்க்கத்திலிருந்து ஓட்டப்பட்டதாம்.

வினா:- கடவுள் அந்தப் பேயை ஏன் அழிக்கவில்லை?

விடை:- மனிதன் வீழ்ச்சியடையஎக்காரணத்தினால்கடவுள் அநுமதியளித்தானோ அக்காரணத்தினாலேயே கடவுள் பேயை ஒழிக்காமல் வைத்துக் கொண்டு இருக்கிறான்.

வினா:- அதன் பொருள் விளங்கச் சொல்லு?

விடை:- தன் பெருமையை நிலைநாட்டும் பொருட்டே கடவுள் பேயை உயிரோடு வைத்துக் கொண்டு இருக்கிறான்.

வினா:- எப்பொழுதும் ஒரு நரகமும் பேயும் இருந்து கொண்டு தானிருக்குமா?

விடை:- இருந்துகொண்டு இருக்குமென்றே அநேகர் சொல்லுகிறார்கள்.

வினா:- பேய்களைப்பற்றிய இம்

# மூட்டைப் பூச்சி.

இரவு ஒன்பது மணியிருக்கும். வீட்டில் எல்லோரும் உணவருந்தியாகி விட்டது. அன்று முற்பகல் தூங்கியதனாலோ என்னவோ எனக்குச் சரியாகத் தூக்கம் வரவில்லை. படுக்கையில் புரண்டு கொண்டிருந்த என்னை மின்சாரம் தாக்குவது போல் ஒரு யோசனை தாக்கியது. தூக்கம் வரும் வரை ஏதாவது கட்டுரை எழுதலாமென்றெண்ணி எழுந்து லாந்தர் ஏற்றிக்கொண்டு மேஜையின் முன் பேனாவும் பேப்பருமாக உட்கார்ந்தேன். கட்டுரை எழுதவேண்டுமென்றுதான் இவ்வாறு செய்தேன். ஆனால் இந்த யோசனை இருக்கிறதே அது ஒரு சனியன், சீக்கிரம் வந்து தொலைகிறதா? என்ன கட்டுரை எழுதுவது? எப்படித் துவக்குவது? என்றெல்லாம் சிந்தித்து சிந்தித்து ஒரு முடிவிற்கு வராது அவதியுறும் அதே சமயத்தில், சமய சந்தர்ப்பம் தெரியாத பிறவிகளின் பிடுங்கல் வேறு வந்து தொலைகிறது. அது யார் அந்த நடுநிசி நண்பன் என்று கேட்கிறீர்களா? பகல் முழுவதும் பாடுபட்டு ஓய்ந்து படுக்கையில் படுத்துறங்குபவன் பாட்டாளி என்றும் பாராது சற்றும் இரக்கமில்லாது அவன் ரத்தத்தை உறிஞ்சும் முதலாளியல்ல மூட்டைப் பூச்சியார் தான். கட்டுரைக்குத்தலைப்புத்தேடித் தத்தளிக்கும் அந்த நேரத்தில் மேஜையின் சந்திலிருந்து மெதுவாக வெளி வந்து என் கை உதிரத்தை ருசி பார்க்கும் போது "கட்டுரைக்குப் பொருள் தேடித் தவிக்கும் தடி ராமா, நான் ஒருவன் இருக்கிறேன் என்பதைக் கூடவா மறந்து விட்டாய்?" என்று குத்திக் கேட்பது போலிருந்தது.

* *

எங்கள் வீட்டில் எது குறைவாக இருந்தாலும் மூட்டைப் பூச்சிக்கு மட்டும் குறைவேயில்லை. மக்களுக்குப் பஞ்சம் வந்ததை நான் எத்தனையோ முறை பார்த்தும் அனுபவித்தும் இருக்கிறேன். ஆனால் இந்த மூட்டைப் பூச்சிகள் மட்டும் இதுவரை பஞ்சத்தில் வதைந்ததை நான் கண்டதுமில்லை கேட்டதுமில்லை. ஒரு சிறு பிறவியின் மீது இவ்வளவு துவேஷமா? என்று ஜீவகாருண்ய சங்கத்தாரும், இச்சிறு பூச்சியைக் கண்டு இவ்வளவு பயமா? என்று மூட்டைப் பூச்சி மருந்து செய்பவரும் பகருதல் கூடுமாயினும், அவர்களை முதலில் ஒரு வாரத்திற்கு எங்கள் வீட்டிற்கு வந்து தங்கியிருந்து பார்க்கும்படி வேண்டிக்கொள்கிறேன். ஏன் இவ்வளவு உறுதியாகக் கூறுகிறேன் என்றால், அதன் தொல்லை சொல்லில் அடங்காது. நான் இதுவரை நன்றாகத் தூங்கிய நாட்கள் ஒன்று அல்லது இரண்டிற்கு மேல் இராது என்றால் அதன் உட்பொருளை உணர எவ்வளவு நேரமாகும் உங்களுக்கு? "எவனோ ஒருவன், பக்தன் கூட அல்ல, புலிக்குப் பயந்து மரத்தின் மேல் ஏறிக்கொள்ள, அப்புலி அவனையே பார்த்தவண்ணம் அம்மரத்தைச் சுற்றி வர, அவனும் மரத்தின் மீதே இரவு முழுதும் கழிக்க எண்ணி, தான் உறங்கி விட்டால் கீழே விழுந்து எங்கே புலிக்கு இரையாகி விடுமோ என்றெண்ணி தூங்காமலிருக்க, அம்மரத்தின் இலைகளை ஒவ்வொன்றாகக் கிள்ளிப் போட அது அவனுக்கும், அந்தப் புலிக்கும், தெரியாத அம்மரத்தடியிலிருந்த ஓர் பாழும் சிவலிங்கத்தின் மேல் விழ, அன்று சிவராத்திரியாய் அமைய, அந்த ஆள் பக்தனாகிச் சிவலோக பதவியடைந்து, சுவர்க்கம் சேர்ந்தான்" என்று ஒரு கதை கூறக் கேட்டிருக்கிறேன். அது போலவே நானும் இப்படி ஒரு சிவராத்திரி அல்ல பல ராத்திரி சிவராத்திரிகள், இலைகளையல்ல, ஆனால் அதைவிட சற்று மேன்மையான மூட்டைப் பூச்சிகளை நசுக்கி அதன் இரத்தத்தால்—மறந்து விட்டேன்—எங்கள் உதிரத்தால் சிவலிங்கம் செய்ய மூலப்பொருளாயுள்ள பூமாதேவிக்கே அபிஷேகம் செய்த எனக்கு எந்த லோகம் பதிவு செய்யப் பட்டிருக்கிறதோ நான் அறியேன்.

* *

எது எப்படியிருப்பினும் இந்த மூட்டைப்பூச்சிகளை அடியோடு நாசமாக்கப் பல முறைகளை நான் கையாண்டும் முடியாமல் போய் விட்டது. "மூட்டுப்பூச்சி அத்துப் போச்சு" என்று ஓலையில் எழுதி வீட்டில் அங்கங்கே மாட்டும்படி எங்கள் பக்கத்து வீட்டுப் பைத்தியக்காரர் சொன்னார். சாம்பிராணிப் புகையிலே அது சாம்பலாய்ப் போய் விடுமென்று ஒரு 10 பலம் சாம்பிராணியை விற்றுப் பணமாக்கும் பலசரக்குக் கடை பாலு செட்டியார் சொன்னார். ஒவ்வொரு மூட்டைப் பூச்சியாகப் பிடித்து அதன் வாயிலே இந்த மண்ணை (மருந்தை)ப்போடு, அது இறந்துவிடும் என்று இன்னொரு ஊரை ஏமாற்றும் உலுத்தன் கூறினான். இப்படி எத்தனையோ பேர் எத்தனையோ விதங்கள் சொல்லி அதன்படி நான் செய்தும் பார்த்தாகி விட்டது. ஒன்றிலேயும் பலிக்கவில்லை. ஆகையால் இப்போது நான் ஓர் முடிவிற்கு வந்துள்ளேன்.

அதாவது கீழ்க்கண்ட விதமாக ஓர் விண்ணப்பம் எழுதி இரவிலே படுக்கைக்கு அடியில் வைத்துவிட்டு, வேண்டுமானால் டார்ச்சு லைட்டையும், பேப்பர், பேனா, மையும் பக்கத்தில் வைத்துவிட்டு தூங்கவேண்டும் என்று:-

எங்களோடு ரத்தக் கலப்புக் கொண்ட சகோதர சகோதரிகளே!

முதல் முதல்—உங்களுக்கு மனித வர்க்கத்தின் சார்பாக எனது வணக்கத்தைத் தெரிவித்துவிடுகிறேன். நீங்கள் என்னையும் என் இனத்தாரையும் நாங்கள் ஏமாந்து இருக்கும் போதோ அல்லது தூங்கும் போதோ வந்து ஒரு சிறு துளி ரத்தத்திற்கு பெரும் பாடுபடுத்தி எங்களைச் சித்திரவதை செய்வதுடன் எங்கள் அருமையான தூக்கத்தையும் கலைத்து, நேரத்தையும் வீணாக்குகி

---

மாதிரிக் கதைகளை மக்கள் ஏன் நம்புகிறார்கள்?

விடை:- அவர்கள் பெற்றோர் நம்பியதினால் அவர்களும் நம்புகிறார்கள்.

வினா:- அந்த நம்பிக்கையைப் பற்றி நீ என்ன எண்ணுகிறாய்?

விடை:- விஷயங்களை ஆராய்ந்து பாராதவர்கள் கூறும் அபிப்பிராயங்களுக்கும், கொண்டிருக்கும் நம்பிக்கைகளுக்கும் மதிப்பே இல்லை.

வினா:- பேய் நம்பிக்கையினால், ஏற்பட்ட பலன் என்ன?

விடை:- பேய் நம்பிக்கையினால் மக்கள் மூடபக்தியுடையவர்களாயும், சஞ்சலமுடையவர்களாயும், பயங்காளிகளாயும், குரூரர்களாயும் ஆகிவிடுகிறார்கள்.

வினா:- பேய் நம்பிக்கை எப்படி ஒழியும்?

விடை:- அறிவியக்கத்தினால் ஒழியும்.

வினா:- உலகத்திலே மிகவும் பயங்கரமானது எது?

விடை:- பயந்தான்.

வினா:- ஏன்?

விடை:- பயம், ஹிருதயத்தையும் உடலையும் திமிராக்கி, தற்காப்புக்குள்ள சக்தியை அழித்து விடுகிறது. தன்னைத் தானே காப்பாற்றிக்கொள்ள ஒருவனுக்குச்சக்தியில்லாதாகும்போது அரசியல், சமயப் பூச்சாண்டிகளுக்கு அடிமைப்பட்டு விடுகிறான்.

றீர்கள். இது நியாயமா? நேர்மையா? நீதியா? சிந்தியுங்கள். உங்களை அடியோடு ஒழித்துவிட வேண்டுமென்று நினைத்தால் நீங்கள் எங்களுக்கு எம்மாத்திரம். ஏதோ ரத்தக் கலப்புக் கொண்டு விட்டீர்களே உங்களைக் கொன்றால் எங்களைக் கொல்வது போலல்லவா? என்று நினைத்து இதுவரை சும்மா இருந்துவிட்டோம். எங்களது இப்பெருந்தன்மையை நீங்கள் தெரிந்தோ தெரியாமலோ இன்னமும் சிறுபிள்ளைத்தனமாக நடந்து கொள்கிறீர்கள். நடந்தது நடந்துவிட்டது. இனியாகிலும் நான் சொல்லுவதைச் சற்றுக் கவனமாகக் கேளுங்கள். இன்று முதல் நாள்தோறும் உங்கள் எல்லோருக்குமாக ஒரு கிண்ணத்தில் எங்கள் ரத்தம் வார்த்து ஓர் குறிப்பிட்ட இடத்தில் வைத்துவிடுகிறோம். இந்த ரத்தம் கொடுப்பதில் எங்களுக்கு ஒன்றும் குறைந்துவிடப் போவதில்லை. எங்களுக்கிருப்பதெல்லாம் பலவிடங்களில் ஒரே சமயத்தில் ஊசி போட்டு உதிரத்தை உறிஞ்சி எங்கள் தூக்கத்தையும் கெடுத்து எங்களைச் சித்திரவதை செய்யாமலிருக்க வேண்டும் என்ற ஒரே கவலைதான். ஆகையினால் இந்த விண்ணப்பம் கண்ட மறுநாளே நீங்கள் எல்லோரும் கூடி ஒருமுகமாக ஓர் முடிவிற்கு வந்து இதை ஆதரித்துப் பதில் எழுதுவீர்கள் என்று எண்ணி இத்துடன் பேனாவும், பேப்பரும், மையும் வைத்திருக்கிறேன்.

இப்படிக்கு,

மூட்டைப் பூச்சி நசுக்கி.

* *

மறுநாள் காலை எழுந்து அப்படியே படுக்கையில் தூக்கம் கலையும் வரை உட்கார்ந்தேன். கீழ் நோக்கி என் தலை தொங்கிக் கொண்டிருந்தபடியால் மயக்கம் தெளிந்து கொண்டிருந்த என் கண்களுக்கு என் மடியின் மீதுகிடந்த ஓர் கடிதம் தென்பட்டது. உடனே வாரிசுருட்டிக் கொண்டு எழுந்து ஆவலாக அதைப்படிக்கலானேன். அதில்,

"உறவாடிக் கழுத்தறுக்கும் உறவினர் அவர்களுக்கு":—

என்றிருந்தது. எனக்கும் ஒன்றும் விளங்கவில்லை. பின்னும் தொடர்ந்தேன்.

"உங்கள் அதிசய அஞ்சல் கிடைக்கப் பெற்றேன். எல்லாம் அறிந்தேன். உங்கள் வேண்டுகோளின்படியே நேற்று காலை எங்கள் மகாநாடு 5—மணிக்கு துவக்கப்பட்டு பல விஷயங்களை விவாதத்திற்கு கொண்டு வந்து மத்தியான உணவிற்கு நாங்கள் உங்களைப்போல போக வேண்டிய அவசியம் இல்லாததினால் மகாநாட்டைத் தொடர்ந்து இரவு 10 மணிவரையில் (அதாவது நீங்கள் எல்லோரும் உறங்கும்வரை) வெற்றிகரமாக நடத்தினோம். மகாநாட்டின் முடிவிலே பல தீர்மானங்கள் கொண்டுவரப்பட்டன. என்னைச் செயலாளனாகத் தேர்ந்தெடுத்ததின் பேரில் இவ்விண்ணப்பத்தை உங்களுக்கு அறிவிக்க வேண்டியவனாயுள்ளேன்.

முதல் முதலில் மூட்டைப் பூச்சிகளின் சார்பாக எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். கடிதத்தின் ஆரம்பத்தில் எங்கள் நடவடிக்கைகளைப்பற்றிக் குறைகூறியிருந்தீர்கள். நாங்கள் வேண்டுமென்றா உங்களை வதைக்கிறோம்? எங்களுக்கு வேண்டுவதெல்லாம் ஒவ்வொரு துளி இரத்தம். அதுவும் நீங்கள் சொல்லுவது போல் ஒரு கிண்ணத்தில்வைத்து விட்டால் போகிறது. அதோடு மட்டும் நிறுத்திவிட்டால் போதாதா? குற்றம் சாட்டி விட்டு அதைத் தொடர்ந்து சவாலும் விட்டிருக்கிறீர்கள். குப்புற விழுந்தும் மீசையில் மண் ஒட்டவில்லையே என்று சொல்லுவது போல். ஆ...கா! உங்கள் வீரத்தை என்னென்று சொல்வது. உங்களைவிட எத்தனையோ மடங்கு சிறியவர்களாகிய எங்களில் பத்துப் பேரை நசுக்கப் பத்து முறை விளக்கையேற்றியும்கூட முடியாமல், வீணாக எண்ணெய் செலவழித்து, வத்திக்கும் வத்திப்பெட்டிக்கும் தீ மூட்டுவீர்களே அது தெரியாதா? வேண்டாம்; வீணாக என் வயிற்றெரிச்சலைக் கிளப்புகிறீர்கள். பிறகு அறையிலிருப்பது அம்பலத்திற்கு வந்து விடும். மானம் கப்பலேறும். சரி அது இருக்கட்டும். விஷயத்திற்கு வருகிறேன். நீங்கள் தெரிவித்தபடி ஒரு கிண்ணம் இரத்தத்தை ஏற்றுக்கொள்ளுகிறோம். ஆனால் ஒரு நிபந்தனையின் பேரில். அதாவது நீங்கள் இருந்தாற்போலிருந்து திடீரென்று எங்கள் எல்லோரையும் ஏமாற்றி விட்டு, வீட்டைக் காலி செய்து விட்டுப் போகக்கூடாது. அப்படிப் போவதாயிருந்தால் எங்களுக்கு ஒரு மாதம் அல்லது இரண்டு மாதம் முன்னறிவிப்போடு செய்யவேண்டும். இந்த நிபந்தனையை ஒப்புக்கொண்டு விட்டதாகப் பிரகடனம் செய்த மறுகணமே நாங்கள் உங்களைச் சித்திரவதை செய்வதை நிறுத்தி விடுகிறோம்.

இங்ஙனம்,

உதிரம் உறிஞ்சிக் கூட்டச் செயலாளர்

மூ. பூச்சி.

* *

கடிதத்தில் கண்ட அக்கடுஞ் சொற்கள் என்னை ஓர் கலக்குக் கலக்கியது. இதற்கு எப்படி விடையிறுப்பது என எண்ணினேன். மறுபடியும் மறுபடியும் அதைப்படித்தேன். இப்படிப் பல தடவை படித்ததின் விளைவு எனக்கு ஆத்திர மூண்டதுதான் மிச்சம். அவ்வாத்திரத்தின் எதிரொலிதான் நான் கீழ்க்கண்டபடி எழுதிய பதில்.

மரமண்டை மூட்டைப்பூச்சிகளின்
மன்னரே!

உங்கள் கடிதம் கிடைத்தது. எல்லாம் அறிந்தேன். எங்களுக்கு இருக்கும் பல தொல்லைகள் போதாதென்று இது வேறேயா? சரி உங்கள விருப்பப்படி உங்கள் நிபந்தனையை நாங்கள் அப்படியே ஏற்றுக்கொள்ளப் போவதில்லையாயினும், நாங்கள் அப்படி வேறு இடம் போவதாயிருந்தால், நாங்கள் எங்கள் மூட்டை முடிச்சுகளைக் கட்டுவதற்குக் குறைந்தது ஒரு நாளாவது ஆகுமே, அதற்குள்ளாக நீங்கள் எல்லோரும் அவைகளில் ஏறிக்கொண்டால் போகிறது. இதைக்கூட நாங்கள் உங்களுக்குச் சொல்லித்தர வேண்டுமா? நீங்கள்தான் எங்களைவிட மேதாவிகள் ஆயிற்றே! போனால் போகிறது. வேண்டுமானால் நாங்கள் போகும்போது எங்கள சாமான்களின் மூலமாக உங்களை ஏற்றிக்கொண்டு போய் வழியிலே ஆங்காங்கும் நீங்கள் விரும்பும் இடங்களில் எல்லாம் (மாட்டு வண்டி, ரயில் வண்டி, பஸ், டிராம் முதலியவைகளில்) விட்டு விட்டு மிகுதியாயுள்ளவர்களை எங்கள் வீட்டிற்கும், விருப்பம் இருந்தாலும் இல்லாவிட்டாலும் வேறு வழியில்லாமையால், இட்டுச் செல்கிறோம் என்று தெரியப்படுத்துகிறோம். இதை ஒப்புக்கொண்டு விடவும். வீணாக எழுதி எங்கள் அருமையான நேரத்தையும் காகிதத்தையும் மையையும் எங்கள் தூக்கத்தை அழிப்பது போல் பாழ்படுத்த வேண்டாம் என்று கேட்டுக்கொண்டு, நாளையதினமாவது நிம்மதியாகத் தூங்கலாம் என்று மனப்பால் குடிக்கும் நண்பன் —மன்னிக்கவேண்டும்—சம்பந்தி,

மூ. நசுக்கி.

* *

எழுதும் படலத்தை இத்தோடு நிறுத்திக்கொண்டு தூங்கும் படலத்தைத் துவக்கிவிட்டேன்.

—"பளிங்கன்"

—○—

## ஆசிரியர் கடிதம்

அய்யா!

அரசு இயல் நிர்ணய சபைக்கு (Constituent assembly) இன்றுவரை எவ்வளவு ரூபாய் செலவு ஆய் இருக்கிறது? தலைவர் சிப்பந்திகள் சம்பளம், செலவு, மெம்பர்கள் படி உள்பட எவ்வளவு செலவு?

ஏ. எஸ். கோவிந்தராஜ்
எம். ஏ. பி. எல்.

[4ம் பக்கத் தொடர்ச்சி]

வினன் ஆவன். நாகரீகம் இன்னதென அறியாதுழன்ற மக்கள் நல்வாழ்வு வாழ ஒரு மொழி ஆக்கித் தந்த உபகாரிக்கே வாலறிவன் என்னும் சொல் பொருந்தும். ஆகவே இம்மொழி பயின்ற பயன் இம்மொழி ஆக்கியோனை வணங்க வேண்டும் என்பதேயாகும்.

மலர்மிசை யேகினான் மாணடி
சேர்ந்தார்
நிலமிசை நீடு வாழ் வார்.

அன்பர் அகத்தில் வீற்றிருக்கும் கடவுளுடைய திருவடிகளை எப்போதும் நினைக்கிறவர் பேரின்ப உலகில் எப்பொழுதும் வாழ்வார்; என்ற கருத்து கூறப்படுகிறது.

மலர்மிசை ஏகினான் என்பது மொழி ஆக்கியோனைக் குறிக்கிறது. அவனது மாணடி சேர்தல் என்பது அவனை வணங்குவதாகும். அவனை வணங்கும் முறை அவன் காட்டிய வழியைப் பயிலுவதே. அதைப் பயின்றவர் பேரும் புகழும் உலகில் நெடுநாள் கொண்டு வாழ்வார் என்பதே சிறந்த கருத்தாகும். இதுவன்றி நிலமிசை என்பதற்கு வீடு என்றும், பேரின்ப உலகம் என்றும் வாய்க்குவந்தன கூறி மக்களை மோட்சம், நரகம் உண்டு என நம்பி அவதியுறும் நிலையில் ஏமாற்ற வேண்டிய அவசியமில்லை. மலர்மிசை ஏகினானை கடவுள் என்றும், அவனது மாணடி சேர்ந்தாரை பக்தர் என்றும் நிலமிசை நீடு வாழ்வார் என்பதை பேரின்ப உலகில் நெடுநாள் இருப்பர் என்றும், கூறும் புராணப் போக்கை நாமும் உண்மை எனக் கொள்வது எத்தகைய மதியீனமான போக்காகும்.

வேண்டுதல் வேண்டாமை
யிலான் அடிசேர்ந்தார்க்கு
யாண்டும் இடும்பை இல.

விருப்பு, வெறுப்பு இன்றி வேண்டியவர் வேண்டாதவர் என்ற எண்ணமின்றி கற்கும் யாவருமே பொதுவாக பலன்பெற மொழி ஆக்கியோன் அடி பற்றியவர்க்கு— கல்வி கற்றோர்க்கு எப்பொழுதும் துன்பம் நேராது என்பதே தக்க கருத்தாகும். மற்றையோர் கருத்து தக்கதன்று.

(தொடரும்)

(3ம் பக்கத்தொடர்ச்சி)

வதைத் தொடர்ந்து நடத்திக் கொண்டே இருந்தார்கள். பிரஸ்தாப விஷயத்தைப் புனராலோசனை செய்வதற்காகக் கூடிய நேரு-படேல்-பட்டாபி அடங்கிய மூவர் கமிட்டியும் "தார்" கமிஷனின் முடிவுகளை மீண்டும் வலியுறுத்தியது. ஆந்திரர்களோ இவைகளில் எதுவுமே ஏற்றுக்கொள்ளாமல் பிரிவினைதான் தங்களுக்கு வேண்டுமென்ற பிடிவாத போக்குடன் அடிக்கடி காவடி தூக்கிக் கொண்டு ஓடி வந்ததைக் கண்ட மத்திய அரசாங்கம் பிரிவினைக் கோரிக்கையை ஏற்றுக் கொண்டு விட்டது. ஆனால் இதில் ஏற்பட்டிருக்கும் சிக்கலும், குழப்பமும் நிறைந்த பிரச்சினை சென்னையைத் தண்டாடுவதா—கூடாதா என்பதில்தான் இருக்கிறது. சமீபத்தில் கூடிய அகில இந்திய காங்கரஸ் காரியக்கமிட்டியும் ஆந்திர மாகாணப் பிரிவினைக் கோரிக்கையையேற்றுக்கொண்டும், சென்னை விஷயமாக எந்தவித முடிவும் செய்யாமல், கமிட்டியைக் காலம் குறிப்பிடாமல் ஒத்திவைத்திருக்கிறது! ஆந்திர மாகாணப் பிரிவினை சம்பந்தமாகவும், சென்னையைப்பற்றிய பிரச்சினையிலும் முடிவு கட்ட வேண்டிய பொறுப்பு மத்திய சர்க்காருடையதும், மாகாண மக்களுடையதும்தானே தவிர, இதில் முடிவு கட்ட அ. இ. கா. காரியக் கமிட்டிக்கு என்ன உரிமையும் யோக்கியதையும் இருக்கிறது? என்ற சந்தேகம் சிலருக்கு எழக்கூடும். இந்த ஜனநாயக நாட்டில் ஒரு கட்சியின் காரியக் கமிட்டி செய்யும் தீர்மானங்கள் தானே அரசியல் சட்டங்களாகப் பரிணமித்துக் கொண்டிருக்கிறது! இது தானப்பா 1949 மாடல் இந்திய ஜனநாயகம்! பிரஸ்தாப பிரச்சனை விரைவில் முடிவுகட்ட வேண்டியதாகும். முடிவை ஆவலோடு எதிர்பார்ப்போமாக.

* *

ஆந்திரப் பிரிவினைக் கோரிக்கை எழுப்பப்பட்ட ஆரம்ப காலத்தில் சென்னை முழுவதும் ஆந்திரர்களுக்குச் சொந்தமானது என்ற அபத்தக் குரலை எழுப்பி, சொத்தை வாதத்தைக் காட்டி, சென்னையை அபகரித்துக் கொள்ள ஆசைப்பட்டார்கள், இந்தப் பேராசைக்காரர்களின் அபாண்ட புளுகுகளுக்குத் தமிழர்கள் சரியான கசையடி கொடுக்க ஆரம்பிக்கவே, தங்கள் எத்துவேலைகள் செல்லுபடியாகாது என்பதை உணர்ந்து கொண்டு, வட சென்னையில் ஆந்திரர்கள் அதிகமாக வசிக்கிறபடியால், அதை ஆந்திர மாகாணத்துடன் சேர்த்துவிட வேண்டுமென்ற பயனற்ற வாதத்துடன் பகீரதப் பிரயத்தனம் செய்து கொண்டிருக்கிறார்கள். இது வாடகைக்கு ஒண்டுக் குடி இருக்க வந்தவன் வீடே தன்னுடையதென்று கூறுவதைப் போல் இருக்கிறது, இந்த வக்கிற புத்தி படைத்தவர்களுடைய செயல். இன்று தமிழர்களுக்கும் ஆந்திரர்களுக்கும் இடையில் இருக்கும் கொஞ்சநஞ்சம் உறவையும் கெடுத்து, மாச்சர்யத்தை வளரச் செய்து பகைமையை மூட்டிவிடும் போல் இருக்கிறது இந்த உலுத்தர்களுடைய செயல்கள்.

"வைதாரை வாழ்வித்து வாழ்விழந்தது தமிழகம்" என்பது ஒரு வழக்கு மொழி. இது அவ்வளவும் உண்மை என்பது இன்று பல துறைகளிலும் காணத்தலைப்பட்டு விட்டது. தமிழர்கள் ஆந்திரர்களை அந்நியர் என்று கருதாமல் பழகியும், இருக்க இடமும் கொடுத்து வந்திருக்கிறார்கள். அரசியல் கட்சியில் செல்வாக்கையும், பாராளும் மன்றத்தில் முதல் அமைச்சர் பதவியையும் கொடுத்து வந்திருக்கிறார்கள். அந்தக் காலத்தில் ஜஸ்டிஸ் கட்சி மந்திரிசபையில் பிரதமராகவிருந்த பொப்பிலி ராஜா போன்றவர்கள் ஆந்திரர் தான். அன்றுமட்டுமென்ன; நேற்றுங்கூட ஆந்திர நாட்டுப் பிரகாசத்தைத்தானே முதலமைச்சராக்கினார்கள். இச்செயல்கள் தமிழருடைய வெள்ளை உள்ளத்தையும் களங்கமற்ற போக்கையும் காட்டவில்லையா? பிரதமர் பதவியை நேர்மையுடன் வகித்து செயலாற்றாமல் லஞ்சலாவண்யங்களில் தலையிட்டு ஊழல் நிரம்பியதால் தானே பிரகாசத்தை—ஆந்திரக்காரரை—நீக்கிவிட்டு ஓமாந்தூராரை—தமிழரை—'பிரதமராக்கினார்கள். இந்தப் பதவி நீக்கத்தை அடிப்படையாகக் கொண்டுதான் ஆந்திரர்களுக்கு கோபமும், கொந்தளிப்பும் ஏற்பட்டு, ஆந்திரம் தனி மாகாணமாகப் பிரிய வேண்டு

மென்று கிளர்ச்சிசெய்து, பிரித்து விட்டுவிட வேண்டியதுதான் என்ற சூழ்நிலைக்கும் கொண்டுவந்துவிட்டார்கள். இது ஆந்திரர்களுடைய நியாயமற்ற போக்கையும், நன்றி கெட்ட செயலையும் காட்டவில்லையா? இந்தக் குள்ள மனப்பான்மை கொண்டவர்கள், இதுவரையில் தமிழர்களுடன் கள்ள மனப்பான்மையுடன்தனே உறவாடி வந்திருக்கிறார்கள் என்று எண்ண வேண்டியிருக்கிறது. இதுமட்டுமா? தமிழர்களுக்கே சொந்தமானதும், ஏகபோக உரிமையுடையதுமான சென்னையை— சரித்திர பூர்வமான சொத்தை—தங்களுடையதென்று தட்டிக் கொண்டுபோகப் பார்க்கிறார்கள். இந்தத் துரோகச் செயலை தமிழகம் என்றென்றும் மறக்காது.

“முழுப் பூசினிக்காயை இலைச் சோற்றில்” மறைக்கப் பார்க்கின்றார்கள் இந்த மூடமதியினர்கள். இந்த உலுத்தர்களுடனா இதுவரையில் உறவு கொண்டாடிக் கொண்டிருந்தோம் என்று நினைக்கும் பொழுது தமிழர்களுக்கு வேதனையாகத்தான் இருக்கும். அண்டை வீட்டை அநியாயமாக அபகரித்துக் கொள்ள ஆசைப்படும் செயலுக்கு நாட்டில் இடமில்லை- அண்டைவீட்டுக்காரனும் விழித்துக் கொண்டிருக்கிறான்—என்பதைத் தெரிந்து கொண்டவுடன் “வடசென்னையில் அதிகமாக வசிக்கிறபடியால் அது ஆந்திரத்துடன் சேரவேண்டும்” என்கிற நியாயமற்ற காரணத்தைக் காட்டி வாதாடுகிறார்கள். இதுபோன்ற “அகப்பட்டதைச் சுருட்டுவோமே” என்ற வெட்கங்கெட்டதனத்தில் ஆந்திரர்கள் இறங்கியிருப்பதைக் கண்டும் வருந்துகிறோம். வீணான குதர்க்கவாதங்கள் நல்ல பலனளிக்காது என்பதை உணர்வார்களாக. சென்னை நகரத்தில் ஒரு அடி நிலத்தைக்கூட தமிழர்கள் யாருக்கும் விட்டுக் கொடுக்கமாட்டார்களென்று ஆந்திரர்களுக்கு எச்சரிக்கிறேன்.

திராவிடநாட்டில் மொழிவாரி மாகாணங்களை ஏற்படுத்துவது என்பது மிக அபத்தமான செயல் என்பதுதான் நம்முடைய கருத்து. ஆந்திரர்களுடைய கோரிக்கையோ ஒரு அர்த்தமற்ற போக்குத்தான். தமிழர்களுடைய கூட்டுறவினின்றும் பிரிய விரும்பும் ஆந்திரர்கள், வடநாட்டுக்கு அடிமையாக ஒரு தனி மாகாணத்தைத்தானே ஏற்படுத்திக் கொள்ளப் போகிறார்கள்? இதனால் ஆந்திர மக்களுடைய வாழ்வில் வளமும், அபிவிருத்தியும் இன்றைக்கு இருப்பதைவிட வளர்ந்துவிடப்போவதில்லை.

பிரிவினை ஏற்படுமானால் குறிப்பிட்ட ஒருசிலருக்காவது செல்வாக்கும், பதவிகளும் கிடைக்காதா என்று கேட்கலாம். அப்படியானால் அவர்கள் பிரிந்துபோவதைப்பற்றி நாம் கவலைப்படவில்லை. பிரியுங்காலத்தில் அனாவசியமான குதர்க்கவாதங்களை ஏற்படுத்தி, குழப்பத்தை விளைவித்துக்கொண்டு போவது நலம் தராது என்று கூறத்தான் ஆசைப்படுகிறோம். நியாயமான போக்குடன் சுமுகமான முறையில் பிரிந்து போவார்களானால்வருங்காலத்தில் தமிழர்களுடைய அன்பும் ஆதரவும் என்றென்றும் ஆந்திரர்களுக்கும் கிடைக்கும். பிரிய விரும்பும் ஆந்திரம் சீரும் சிறப்புடன், வளமெல்லாம் பெற்று இந்தியாவிலேயே தலைசிறந்த மாகாணமாகத் திகழ தமிழர்களுடைய அன்பு வாழ்த்துக்களையும் சமர்ப்பிப்பார்கள். ஆனால் ஆந்திரர்களுடைய போக்கு சென்னையைப் பிணக்காடாக்கிவிடும்போல் இருக்கிறது.

“மதராஸ் மனதே” என்ற மட்டரகமான வாதத்தில் இறங்கியிருக்கிறார்கள் ஆந்திரர்கள்.

“சென்னை எங்களுக்குத்தான் சொந்தம், அதை விட்டுக்கொடுக்க முடியாது. சென்னைக்காக இரத்தம் சிந்தவும் தயங்கமாட்டோம்.” என்று முழக்கமிடுகின்றனர் பல தமிழர்கள்.

“உங்களுக்கு ஏனப்பா இந்தத் தகராறுகளெல்லாம். சென்னை உங்கள் இரண்டுபேருக்கும் வேண்டாம், எங்களிடம் விட்டுவிடுங்கள் நாங்கள் எடுத்துக்கொள்ளுகிறோம்; என்று கூறாமல் கூறிக்கொண்டு சென்னையை மத்திய சர்க்காரின்நேரடிஆட்சிக்குட்பட்ட பிரதேசமாக்கி,வடநாட்டுமுதலாளி வர்க்கத்தின் வளர்ப்புப் பண்ணையாகவும் நிரந்தரமானசுரண்டல் பூமியுமாக்க வடநாட்டு அதிகார வர்க்கம் திட்டமிட்டுக் கொண்டிருக்கிறது. உடன் பிறந்த சகோதரர்களான ஆந்திரர்களுக்கே சென்னையை விட்டுக் கொடுக்க முடியாது என்று வாதாடும் தமிழன், வடநாட்டு மார்வாடிக்கூட்டத்திற்கு சென்னையை விட்டுக் கொடுத்துவிடுவானா என்றுதான் கேட்கிறேன்?

இந்த நேரத்தில்தான் சென்னை யாருக்கு? என்றகுழப்பமும்கலவரமும் நிறைந்த கேள்வி ஒவ்வொரு தமிழனுடைய உள்ளத்திலேயும் எழுந்திருக்கிறது. இவை வெறும் கேள்விகள் அல்ல; வேதனை நிறைந்த உள்ளத்திலிருந்து வெடித்துவெளிவரும் தீப் பிழம்பு. எதிர்த்தோரை எரித்து சாம்பலாக்கும் சக்திவாய்ந்ததென்பதை வருங்காலம் உணர்த்தும்.

சென்னை தமிழ்நாட்டின் தலைநகரம். இது தமிழருக்கு உயிர்ப்பு. சென்னைக்கு—தமிழ்நாட்டின் தலை நகரத்திற்கு—ஏற்பட்டிருக்கும் ஆபத்தை தடுக்க வேண்டியது ஒவ்வொரு தமிழருடையவும் நீங்காத கடமையாகும். சென்னைதமிழர்களுடைய பூர்வீகச் சொத்து. அதை இழக்க முடியாது என்பது இங்குள்ள அனைவருடையவும் ஏகோபித்த முடிவாகும். இதற்கும் அரசியல் கருத்து வேற்றுமைக்கும் சம்பந்தமில்லை. எனவே, தமிழ்நாட்டிலுள்ள எல்லா கட்சிகளும் ஒன்று சேர்ந்து ஒருகூட்டு முன்னணியை ஏற்படுத்திப் போராட்டத் திட்டம் தீட்டுவார்களாக! இது மிகவும் அவசரமும் அவசியமுமான நெருக்கடியான சந்தர்ப்பம். காலதாமதப்படுத்துவது அசம்பாவிதமாக முடிந்தாலும் முடியக்கூடும். நாட்டில் நாங்கள் தான் செல்வாக்குள்ள கட்சி என்று கூறிக்கொண்டிருக்கும் காங்கரஸ்காரர்கள் அய்க்கிய முன்னணியை ஏற்படுத்தும் வேலையை முன்னின்று செய்வார்களா?

தமிழர்கள் அமைதியையும், சமாதானமான நல்லுறவையும் தான் விரும்புகிறார்கள். ஆந்திரர்களுடைய போக்கோ, மற்றவர்களுடைய செயல்களோ, சென்னையை நவகாளியாக்கி, இரத்தகளமாக்குமானாலும் தயங்காது போராடி தமிழகத்தின் தலைநகரைக்காப்பாற்றியே தீருவார்கள் என்றுஆந்திரர்களுக்கும், வடநாட்டவர்களுக்கும் எச்சரிப்போமாக.

—புத்ததாசன்.

ரோஜா முத்தையா
ய்ச்சி நூலக அறக்கட்டளை

(2ம் பக்கத் தொடர்ச்சி)

நம்பிக்கை வைப்பது அநேக கஷ்டங்களையும், மனக் கிலேசத்தையுமே உண்டுபண்ணுவதாயிருக்கின்றது. இதனால் மக்கள், பூசாரிகளுக்கும், மந்திரவாதிகளுக்கும், நக்ஷத்திர அதிதேவதைகளைத் திருப்திசெய்வதற்கென மணிமந்திர பூஜா கைங்கரியங்களுக்கும் ஏராளமான பொருளைப் பறிகொடுக்கின்றனர். சோதிடமே உண்மையென ஏற்றுக்கொண்டபோதிலும் இவர்கள் பூமியில் செய்யும் மந்திர யந்திர தந்திர பூஜைகள், பரந்த ஆகாயத்தில் எத்தனையோ கோடி மைல் தூரத்திற்கப்பாலிருந்துகொண்டு அதிவேகமாகச் சதா சுழன்றுகொண்டிருக்கும் நக்ஷத்திரங்களை, எவ்வாறு திருப்திசெய்கின்றதோ அறியோம்!

ஒரு சோதிடன் ஆருடம்பார்த்து "காலம் போதாததாகவிருக்கின்றது" என்று சொல்லிவிட்டால் போதும், அது எவ்வளவு அத்தியாவசியமான காரியமாக இருந்தபோதிலும் உடனே அதனைக் கைநழுவவிட்டுவிடத் தயாராக இருக்கும் எத்தனையோ மனிதர்களை இப்பொழுதும் காணலாம். நல்ல அழகும், சம்பத்துகளும் நிறைந்த ஒரு வாலிபனோ, அல்லது கன்னிகையோ மூலநட்சத்திரம் (Mars) போன்ற இன்னும் சில நட்சத்திரநாட்களில்பிறந்திருந்தால் அவர்களுக்குக் கலியாணம் ஆவது மிகவும் கஷ்டமாம்! இந்த மாதிரியான இளைஞர்களின் மணவிஷயமாகத் தினசரிப் பத்திரிகைகளில் விளம்பரங்கள் மும்முரமாக வந்துவிடும்; ஏனெனில் அந்தக் கெட்ட நட்சத்திரத்தில் பிறந்த ஒருவனுக்கும் அதேமாதிரியான நக்ஷத்திர தோஷமுள்ள ஒருத்திக்கும் மணம் நடைபெறாது; வேறு விதமாக நடைபெற்றுவிடின், புருஷனோ, மனைவியோ, மாமனாரோ, அன்றி மாமியாரோ கட்டாயம் மாண்டேதீருவார்களாம்! கலியாணமான பின்னர் ஏதோ காரணத்தால் கணவன் கண்ணுறங்கிவிடின், அப்பொழுது அவ்வித இளம் விதவைகள் மிக்க துர்அதிர்ஷ்டசாலிகளாகக் கருதப்பட்டு அவர்கள் கொடுமையாக நடத்தப்படுகின்றார்கள். பம்பாய், கல்கத்தா முதலிய நகரங்களில் குதிரைப்பந்தயம்முதலியவற்றிற்கு மேல், பணம் கட்டுபவர்கள், அவ்வாறு செய்வதற்குமுன் ஒரு சோதிடனிடம் ஆருடம் கேட்டே பணம் கட்டுகின்றனர். சோதிடன் சொன்னமாதிரியே அநேக மந்திர தந்திரங்களுடனே நடந்தபோதிலும், அவர்களில் அநேகர் பல தடவைகளில் கட்டிய பணத்தை இழக்கின்றனர். எத்தனை தடவைகளில் அவ்வாறு மோசம்போனபோதிலும், அவர்களிடம் இந்த மாய சோதிடத்தின்பால் வைத்துள்ள மூட நம்பிக்கை குறையாமலிருப்பதை இன்னும் காணலாம். வியாபார நிமித்தமாகத் தங்கள் மூலதனத்தைப் போட்டுச் சரக்குகளை சேகரித்து வைத்திருப்பவர்களில் அநேகர், சோதிடனை நம்பி நல்ல காலத்திற்காகக் காத்திருந்து மோசம்போகின்றார்கள். சோதிடத்தை விடுத்துத் தங்கள் சுயமதியை நம்பி நடந்திருப்பார்களானால், மிக்க நலமாகவேயிருக்குமென்பதை அவர்கள் அறிகின்றார்கள் இல்லை. ஒரு அறிவாளிக்கு விஞ்ஞான தத்துவங்களெல்லாம் (Scientific-truths) வெளிப்படையானவைகளாகவே இருக்க வேண்டும்: அவற்றுள் ஏதாவது ஒரு சித்தாந்தம் தப்பிதம் என்பதாக நிரூபிக்கப்பட்டுவிட்டால், அதனால் என்ன நன்மை நேரிடுவதானாலும் அது தள்ளிவிடப்படுகின்றது. சோதிடமானது வெளிப்படையான உண்மையானதென்று நிரூபித்துக் காட்டப்பட்டதுஅல்லவாயினும், அதன் கொள்கைகளின் பிரகாரம் நமது எதிர்காலத்தை முதலிலேயே அறிவதால், நமக்கு இப்போதிருக்கும் நன்மை தீமைகளைவிட ஏதாவது அதிகமான நன்மை ஏற்படப்போகிறதா என்பதை நாம் கேட்டுத் தெரிந்துகொள்ள ஆசைப்படுகின்றோம். இனி என்ன ஏற்படப்போகின்றது என்பதை நிச்சயிக்கமுடியாததாக இருப்பதனால், எதிர்காலத்தைக் கூடியமட்டும் தன் மனோவலிமையாலும், சமய சாமார்த்தியத்தாலும் வென்று சமாளிப்பதில்தான், வாழ்நாளில் நமக்குமகிழ்ச்சி ஏற்படுகின்றது. ஒருவன் தனது ஜாதகத்தைக்கொண்டு தனது ஆயுட்காலத்தில் ஏற்படக்கூடிய ஒவ்வொரு சம்பவங்களையும் முதலிலேயே உணர்ந்துகொள்ளுவானாயின் அவன் தனது நடத்தைகளில் ஒரு சிறிதும் கவனம் செலுத்தாமல், தானாக வேறு எந்தக் காரியத்தையும் செய்ய மனம் இல்லாதவனாய், சமுதாய வாழ்விற்கோர் முட்டுக்கட்டையாகவே இருப்பான் என்பது திண்ணம்.

சோதிட சாஸ்திரத்தில் நம்பிக்கை கொள்வதானது, உயிருக்குயிராய் எங்கும் நிறைந்து எல்லாவற்றையும் காத்தளிப்பதாகக் கூறும் ஒரு அழியாத கடவுள்மேல் வைக்கும் நம்பிக்கைக்கு முற்றும் மாறானதேயாகும். மதத்திலே மாறாத பக்தி கொண்டு தங்கள் இஷ்டகாரியாதிகளுக்காக அந்த சர்வவல்லமையுள்ள கடவுளையே அடிபணிந்து பிரார்த்தித்து, எண்ணிய எண்ணியாங் கெய்துவதாகக்கூறும் பல மத பக்தர்கள்கூட தங்கள் கொள்கைகளுக்கு மாறாக விளங்கும் "நட்சத்திரங்களின் நியதிப் பிரகாரம் விதித்த விதி மாறாது நடக்கின்றது" எனக்கூறும் அந்தச் சோதிடத்திலும் குறையாத நம்பிக்கைபோடிருப்பது எதற்காகவோ அறியோம்.

இம்மாதிரியான ஒன்றுக்கொன்று மாறுபட்ட தன்மையுடையவைகளை நம்பி நடப்பது அவர்கள் தங்களுடைய அறிவை நேர்வழியில் செலுத்தாமையையே விளக்குகின்றது. மதப்பற்று மிக்குள்ளோருக்கும் பகுத்தறிவிற்கும் வெகுதூரம் போலும்!

நாம் இவ்வளவு அதிகமாகச் சோதிடத்தைப்பற்றி வலியுறுத்த வேண்டியேற்பட்டது எதனாலெனில், இரசாயனம் பூகோளம் முதலிய சாஸ்திரங்களைப்போல் இதனையும் ஓர் உண்மைச் சாஸ்திரமாகக் கருதி வருவதாலும், இதனை முற்றும் நம்பி மோசம்போகும் மாந்தர்கள் இந்தியாவில் மாத்திரம் அன்றி இன்னும் பிற நாடுகளிலும் ஏராளமாக இருக்கின்றார்கள் என்பதனாலுமேயாகும். மேற்குறித்த எதிர்ப்புகள் சோதிடம் போன்ற இன்னும் பல போலி சாஸ்திரங்களுக்கும் பொருத்தமானவைகளே. உதாரணமாக மிக்க பிரக்கியாதி பெற்றுள்ள இரேகை சாஸ்திரமும் போலியேயாகும். அறிவைக் கையாளுவோருக்கு எதிர் காலத்தை அறிவிக்கும் ஓர் குறுக்கு வழி இல்லையென்று கூறலாம்.

நாம் அதைப்பற்றி நம் அனுப்

# பகுத்தறிவும் கடவுள் வாக்கும்!

('சென்ற வாரத் தொடர்ச்சி)

வினா:- வேதங்களுக்கு ஜனங்கள் அதிக மதிப்புக் கொடுக்கக் காரணம் என்ன?

விடை:- வேதங்கள் இல்லையானால் ஒழுக்கங் கெட்டுவிடும் என்ற பயமே அதற்குக் காரணம்.

வினா:- அத்தகைய் பயத்துக்கு ஏதாவது ஆதாரமுண்டா?

விடை:- இல்லவே இல்லை. வேதங்களின் பெயரால் எவ்வளவோ பயங்கரக் குற்றங்கள் செய்யப்பட்டிருக்கின்றன. மாறாக வேதங்களையே நம்பாத அநேகர் உத்தமர்களாக இருந்திருக்கிறார்கள்.

வினா:- எப்பொழுதாவது கடவுள் பிரத்தியட்சமாகி வேதத்தை அருளியதுண்டா?

விடை:- இல்லை. சுமார் 5000 வருஷங்களுக்குமுன் கடவுள் வேதத்தை அருளியதாகவே நம்பப்படுகிறது.

வினா:- அதற்குமுன் உலகத்தில் ஒழுக்கம் இருந்ததில்லையா?

விடை:- நிச்சயமாக ஒழுக்கம் இருந்தே வந்தது. அதற்குமுன் மக்களும், சமூகங்களும் தேசங்களும் இருந்தே வந்திருக்கின்றன.

வினா:- உலகத்திலுள்ள ஒவ்வொரு தேசத்தாருக்கும் கடவுள் தனித்தனி வேதம் அருளினானா?

விடை:- இல்லை. யூதர்களுக்கு மட்டும் கடவுள் வேதம் அருளியதாகவே பொதுவாக நம்பப்படுகிறது.

வினா:- அப்படியானால் உலக மக்களில் யூதர்கள் மட்டுந்தானா ஒழுக்கமுடையவர்கள்.

விடை:- இல்லவே இல்லை. கடவுள் மூலம் வேதம் பெறாத கிரேக்கர், பண்டு மிக்க நாகரீகம் உடையவர்களாயிருந்திருக்கிறார்கள்.

வினா:- அதனால் விளங்குவது என்ன?

விடை:- வேதத்துக்கும் ஒழுக்கத்துக்கும் எத்தகைய சம்பந்தமும் இல்லை என்பது அதனால் விளங்குகிறது.

வினா:- வேதங்களில்லையானால் ஒழுக்கம் கெட்டுவிடும் என்று போதிப்பதினால் நன்மை ஏற்படுமா?

விடை:- ஏற்படாது. முதலில் வேதங்கள் இல்லையானால் ஒழுக்கம் கெடாது. இரண்டாவது வேதங்களில் ஜனங்களுக்கு நம்பிக்கை இல்லாமலாகி விட்டால் ஒழுக்கத்திலும் நம்பிக்கை இல்லாமலாகிவிடும்.

வினா:- மெய்யான விஷயங்களில் நம்பிக்கையை வலுப்படுத்துவது எப்படி?

விடை:- பிரதிபலனை எதிர்பாராமல் நன்மையானதைச் செய்வதினாலும், விரும்புவதினாலும் வலுப்படுத்தலாம்.

வினா:- நல்லொழுக்கத்திற்கு வேறு தூண்டுதல்கள் எவை?

விடை:- முக்கியமான தூண்டுதல் சுயமதிப்பில் விருப்பம்; இரண்டாவது பிறகுல விருப்பம்; மூன்றாவது கடமை உணர்ச்சி.

வினா:- கடமையைச் சரிவரச் செய்வது எப்பொழுதும் இன்பகரமாக இருக்குமா?

விடை:- கடமை ஒரு சோதனை என்றும், உத்தமர்களாக இருக்க வேண்டுமானால் நம்மையே நாம் தியாகம் செய்து விடவேண்டும் என்றும் பழைய மதங்கள் போதனை செய்கின்றன.

வினா:- அத்தகைய மதபோதனையினால் விளையும் பயன் என்ன?

விடை:- அதனால் உத்தம வாழ்க்கை நடத்த ஜனங்கள் பயப்படுகிறார்கள். உத்தம வாழ்க்கையைப்பற்றி எண்ணும் போதும் பயமும் மனச்சோர்வுமே அவர்களுக்கு உண்டாகிறது.

வினா:- அவ்வளவுதானா?

விடை:- துஷ்டர்களுக்குத்தான் இந்த உலகத்தில் சந்தோஷமாக இருக்க முடியும் என்ற நம்பிக்கையும் பாமர மக்களுக்கு உண்டாகிறது.

வினா:- கடமை என்பதற்குச் சரியான பொருள் என்ன?

விடை:- கடமை ஒரு சோதனை அல்ல. தியாகமுமல்ல. கடமை என்பது ஒற்றுமை, அழகு, மகிழ்ச்சி, சரீர மானஸ விதிகளை நாம் மீறும்போதுதான் நாம் ஆத்ம தியாகம் செய்து சோதனைக்கு உள்ளாகிறோம்.

★

## ஏது மதம்?

"எனது தாய் நாட்டில் ஒரு நாயும் கூடப் பட்டினி கிடக்க நான் பொறுக்கமாட்டேன். அதற்கு உணவு கொடுத்துக் காப் காப்பாற்றுவதே எனது மதம். அதைத் தவிர மற்றவையெல்லாம் மூட மதம். வேஷதாரிகள் நடிக்கும் மதம்".

—விவேகானந்தர்.

---

வத்திற்கேற்ப ஏதோ உத்தேசித்தல்கூடும்; எவ்வளவுக்கெவ்வளவு அதிகமான சமாச்சாரங்கள் நமக்கு எட்டுகின்றனவோ அவைகளுக்கேற்ப நமது உத்தேசமும் உண்மையாக அமைவதைக் காணலாம். மானச தத்துவங்களின் விவரங்கள் நமக்கு அதிகமாக விளக்கமுறாதிருத்தலின், தற்காலத்தில் "மனிதன் எதிர்காலத்தை அறிதல் என்பது குதிரைக் கொம்பே"யாம்; ஏனெனில் எல்லாவித மனித முயற்சிகளினும், எதிர்பாராத சந்தர்ப்பங்களைத் தனது புத்தி சாதுர்யத்தாலும், விடா முயற்சியாலும் கூடுமான வரையிலும் அடக்கியாளலாம். அறிவாளியாக இருக்கின்ற ஒரு மனிதன் தனக்கு எதிர்பாராத விஷயங்கள் நேர்ந்து அவை மனித முயற்சிகளுக்கு மேற்பட்டுவிடின் அவைகளுக்காகக் கடவுளையும் காலத்தையும் நோகாமல் "ஆனது ஆகட்டும்" என அதன் போக்கிலே எதிர்த்து நின்று தனது திடசித்தத்தால் சந்தோஷமடைகிறான்.

---

அச்சிட்டு வெளியிடும் ஆசிரியர் என். கரிவரதசாமி. தமிழன் அச்சகம் 59. கச்சேரி வீதி, ஈரோடு.